


பி. ஸ்ரீ.

221. குறுமுனிவர் பெருஞ்சிறப்பு

அகஸ்தியர் வடமொழியில் வல்லவராக இருந்து தமிழையும் ஆராய்ந்தவர் என்றும், சில வேத மந்திரங்களை வெளியிட்டதோடு பேரகத்தியம், சிற்றகத்தியம் என்னும் இலக்கண நூல்களை இயற்றினர் என்றும் சொல்லுகிறார்கள். வேத முனிவரே தமிழ் முனிவராகி, மென்மையான ஓசை யின்பத்தில் வேத மொழியையும் வெல்லுமாறு தமிழைச் செப்பனிட்டு வைத்ததாகக் கூறுகிறான் கம்பன். இது கவிஞனது தமிழ்ப் பெருங் காதலை வெளியிடுகிறது. 'கடந்த ஞானியரும் குழந்தைகள் மீதுள்ள காதலை மறக்க முடியுமா?' என்று ஒரு கவிஞர் பாடியுள்ளார். கம்பனைப் போன்ற மகா கவிஞர்களும் பரம பக்தர்களுங்கூடத் தாய் மொழியின் பாசத்தையும் மறப்பதில்லை.

ராமனுக்கு வழங்கும் வரதன்


வருந்திப் பழகவேண்டிய உச்சரிப்புக் கஷ்டங்களையுடைய வேதங்களைக் காட்டிலும், உலக வழக்கிலிருந்தும் செய்யுள் வழக்கிலிருந்தும் அகஸ்தியர் செப்பனிட்ட செந்தமிழ் உயர்தனிச் செம்மொழியாக உயர்ந்து விளங்குகிறது என்று கூறும் கவிஞன், தாய்மொழியின் பெருமையை வற்புறுத்துவதுடன், ஆரிய திராவிடக் கலப்பு நாகரிகத்தின் சிறந்த நினைவுக்குறியான அகஸ்திய முனிவரின் பெருமையையும் வற்புறுத்துகிறான். வற்புறுத்தி, அத்தகைய தமிழ் முனிவரைக் காவிய நாயகனாகிய ராமனும் அடிபணிந்து, அரக்கரை வென்று அறத்தை நிலை நிறுத்துவதற்கு இன்றியமையாத சில சாதனங்களைப் பெறுகிறானாம்.

ராமன் முதலானோர் தமது ஆசிரமத்திற்கு அருகே வந்து கொண்டிருக்கிறார்கள் என்று தெரிந்ததும், தமிழ் முனிவர் எதிர் கொண்டுவருகிறார். எதற்காக? மற்ற முனிவர்களைப் போல் தாம் ராமனிடம் அபயதானம் பெற வரவில்லையாம், ராமனுக்குச் சரணம் வழங்க வருகிறாராம்.

நீண்ட தமிழ

நெடுமால் நீண்ட திருவடிகளால் உலகை அளந்தாரென்றால், இக் குறுமுனிவரும் உலகை அளக்கத் துணிந்தாராம். தம் குறுகிய அடிகளால் எப்படி அளப்பது? ஆகவே, தம் நீண்ட தமிழால் உலக முழுவதையும் அளந்து விட்டாராம். ஆம், கருத்துலகம் முழுவதையும் அளக்கும்படி அகஸ்தியர்—தமிழ் நீண்டு கொண்டே போகிறதாம். என்ன அழகான சிறந்த, பொருள் பொதிந்த, கருத்து! விரிந்து விரிந்து தகுதி வாய்ந்தவர்களுக்கெல்லாம் இடம் கொடுத்த சங்கச் சிறு பலகையும் இந்த உண்மைக்கு ஒரு நினைவுக் குறிதான்.

இந்த உண்மையை நாமெல்லாம் நன்கு உணர்ந்து கொண்டு அகஸ்தியர் போல், சங்கப் புலவர் போல், கம்பன் போல், வள்ளுவர் போல், காலத்திர்கு இசைய நீண்டுவரும் தமிழால் உலகம் கருதுவதை யெல்லாம் அளந்து பார்க்கவேண்டும். உலகம் அறிந்ததை யெல்லாம் தமிழும் அறிந்து இன்புர்று, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தோங்க வேண்டும். அதர்குத் தமிழர்களாகிய நாமும் காலத்திர்கு இசைந்த முறையில் ஆரிய — திராவிட — ஐரோப்பிய நாகரிக ஸாரத்தை நமதாக்கிக் கொண்டு வளர்ந்தோங்க வேண்டுமல்லவா?





இனி, இக்குறிப்புக்களைச் சுடர் போல் இறுதி — அடியில் வெளியிடும் செய்யுள் முழுவதையும் நோக்கு வோம் :

ஆண்தகையர் அவ்வயின்
    அடைந்தமை அறிந்தான்,
ஈண்(டு) உவகை வேலைதுணை
    ஏழுலகம் எய்த,
மாண்டவரதன் சரண்
    வழங்க எதிர்வந்தான்,
நீண்டதரி மூன்றுலகை
    நேமியின் அளந்தான்.

[ஆண்தகையர் — ஆண்மைக் குணமுள்ளவர்கள் ; ராமலட்சுமணர் கள். அவ்வயின்—அவ்விடத்தில்; அப்போது. ஈண்டு உவகைவேலை—மேன் மேல் எழுகின்ற மகிழ்ச்சிக்கடல். துணை ஏழ் உலகம்—ஈரேழு (பதினாலு) உலகங்களையும். எய்த — அடையுமாறு. மாண்ட—(இங்கே) மாட்சிமைப்பட்ட. வரதன்—வரங்களைக் கொடுத்தருளும் அகஸ்தியர். சரண் வழங்க — தம் திருவடிகளை வழங்கும்படி ; ராமன் தன் அடிகளில் விழுந்து வணங்கும்படி. நேமியின்—சக்கரத்தை ஏந்திய திருமால்போல.]

உலகை மூழ்கடித்த கடல்

ராமனது வருகை கேட்டதும் விருந்தினரை எதிர்கொண்டு வருகிறார் தமிழ் முனிவரும். இச்சந்திப்பு ராவணாதி ராட்சஸர்களின் அழிவிற்கு அவசியமானது. ஆகவே, அகஸ்தியர் எதிர் கொண்டதும் உலகமெல்லாம் பூரித்துப் போயிற்றாம் ; உவகைக் கடல் பொங்கி உலகங்களை யெல்லாம் மூழ்கடித்து விட்டதாம்.

அந்த ஆனந்த அதிசய வெள்ளத்தினிடையே இரண்டு அலைகள் சந்திக்கின்றன என்று சொல்லும்படியாகச் சந்திக்கப் போகிறார்கள் ராமனும் அகஸ்தியரும். ஆனால் அகஸ்திய முனிவரை ஒரு சிற்றலையாக எண்ணி விடலாகாது, வடிவை நோக்கி. வடதிசை 'நீசம்உற'த் தென்திசை வந்தவரல்லவா ? வேதம் தந்த வடமொழியினும் உயர்ந்து நிலவத் தமிழ் தந்தவரல்லவா ? விந்திய மலையை அடக்கியவரல்லவா ?

கடல்குடித்த குறு முனி


இப்படியெல்லாம் குறுமுனிக்குப் பெருமை கற்பித்தது போதாதென்று, கடலைக் குடித்தவரென்றும் கவிஞன் கூறுகிறான் :

'பண்(டு) அவுணர் மூழ்கினர்
    படர்கள்என வானோர்
'என் தவ ! எமக்கருள்'
    எனக்குறை இரந்தார்.

கண்(டு), ஒருகை வாரினன்
முகந்தகடல் எல்லாம்,
உண்(டு) அவர்கள் பின் 'உமிழ்க'
என்றலும் உமிழ்ந்தான்.

[பண்டு — முன் ஒரு காலத்தில். அவுணர் — அசுரர்கள். மூழ்கினர் — மூழ்கி மறைந்திருக்கிறார்கள். படார்கள்—அழிய மாட்டார்கள். வானோர்—தேவர்கள். என் தவ—(யாவராலும்) மதிக்கத் தகுந்த தவமுடைய அகஸ்தியரே !]

முன்னொரு காலத்தில்—உலகத்தின் ஆதி மகாயுத்தமாகிய தேவாசுர யுத்த காலத்தில் — அசுரர்கள் கடலில் மூழ்கி மறைந்துகொண்டார்களாம். அவர்களைத் துரத்திப் பிடிப்பதற்குக் கடல்நீர் இடையூறாக இருந்ததால் இந்திரன் முதலிய தேவர்கள் அகஸ்தியரிடம் குறை யிரந்து முறையிட்டுக் கொண்டார்கள். 'ஏதாவது உபாயம் சொல்லக் கூடும் குறுமுனிவர்' என்று தான் எதிர்பார்த்திருக்கலாம். ஆனால் அவர்களை அந்நிலையில் கண்டதும், அவர்கள் பிரார்த்தித்து முடிப்பதற்கு முன்பே — அகஸ்தியர் ஒரு கையால் கடல்நீரை வாரி எடுத்தாராம். அந்தச் சிறு கை கொண்ட அளவிற்குத் தானா? வாரி மொண்டு எடுத்து ஆசமனம் செய்து விட்டார் கடல் நீர் முழுவதையும்! தேவர்கள் திடுக்கிட்டுப் போனார்கள். கடல் இல்லாமல் பூமி பிழைத்திருக்குமா ? அசுர வதத்தை அதிவிரைவில் முடித்துக் கொண்டு, 'உண்ட கடலை மீண்டும் தயவு செய்து உமிழ்ந்து விடவேண்டும்!' என்று மீண்டும் குறை யிரந்து முறையிட வேண்டியதாயிற்று இந்திராதி தேவர்களுக்கு.



பி. ஸ்ரீ.

222. ஆனந்தமான தத்துவக் கனவுகள்

அகஸ்தியர் கடலைக் குடித்த கதைதான் எவ்வளவு நகைச்சுவையுடன் சொல்லப்பட்டிருக்கிறது! கண்டார், ஆசமனம் செய்வது போல் ஒரு கையால் வாரி முகந்தார்; 'குறுமுனி குடித்து விட்டாரே, ஐயோ, கடலெல்லாம் போய் விட்டதே!' என்று தேவர்கள் கதி கலங்கிப் போய் விட்டார்களாம். பிறகு 'உமிழ்ந்து விடும்' என்றதும் அப்படியே குழந்தை போல் உமிழ்ந்து விட்டாராம். அதை எவ்வளவு அதிசயமாகக் காட்டுகிறான் கவிஞன், தானும் ஒரு குழந்தை போலே:

கண்டொருகை வாரினன்
முகந்து கடல் எல்லாம்
உண்(டு) அவர்கள் பின்'உமிழ்க'
என்றலும் உமிழ்ந்தான்!

சரித்திரப் புதையல்

இவ்வளவு ஹாஸ்யமாய் வெளியிடப்பெறும் இக் கதைக்குள்ளேதான் எவ்வளவு பொருள் புதைந்து கிடப்பது போலக் காண்கிறது! மலையை அடக்கிய கதையில், வட இந்திய நாகரிகம் விந்தியம் தாண்டித் தென்னாட்டுக்குள் வந்த சரிதம் புதைந்து கிடப்பதுபோல், கடலைக் குடித்த கதையிலும் ஏதாவது ஒரு சரித்திரப் புதையல் கிடைக்கக் கூடுமா?

தமிழர்கள் திரைகடல் ஓடி ஜாவா முதலான வெளி நாடுகளுக்குச் சென்றதன் அறிகுறியாக அகஸ்தியர் - சிலைகள் அந் நாடுகளில் இன்றும் காணப்படுகின்றன. இதிலிருந்து, அகஸ்தியரை அறிகுறியாகக் கொண்ட ஆரிய - திராவிடக் கலப்பு நாகரிகத்தைத் தமிழர்கள், கடல் கடந்து போன காலங்களில் தங்களுடன் கொண்டு போய் வெளிநாடுகளிலும் பரப்பி வைத்தார்கள் என்று தெரிய வருகிறதல்லவா?

வேறு சரித்திரப் புதையல்களும் இக் கதைக்குள் மறைந்து கிடக்கக் கூடும். அகஸ்தியர் கலைக் கடலைக் குடித்து உமிழ்ந்ததாகக் கொள்ளலா

மென்றும், அதாவது, தம் காலத்தில் தமிழ் நாட்டிலே கலைக்குப் புத்துயிர் அளித்தாரென்றும் ஒரு ரஸிகர் ஊகிக்கிறார். இவர், அசுரர்களை உண்மையுணர்ச்சியற்ற படாடோப பண்டிதர்களாகவும், தேவர்களை உயர்ந்த லட்சியம் உடையவர்களாகவும் கருதுகிறார். அகஸ்தியர் உமிழ்ந்தது, தாம் உண்ட கலைக்கடலின் ஸாராம்சத்திற்குப் புத்துயிர் அளித்த 'ரினைஸான்ஸ்' தானும். அகஸ்தியரால் ஏற்பட்ட ஒரு மறுமலர்ச்சி — இயக்கத்தைத் தான் கம்பன் இப்படிக் கடலைக் குடித்து உமிழ்ந்த கதையாக்கி விட்டான் என்கிறார் இந்த ரஸிகர்.

உட்பொருள்

இது எப்படி யிருந்த போதிலும், தமிழ் முனிவர் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ்க் கடலையும் குடித்தவரென்பது பொதுவாகத் தமிழர்களுக்குத் தொன்று தொட்டு வந்திருக்கும் அபிப்பிராயம் தான். இலக்கியம், சங்கீதம், சமயம் வைத்தியம் முதலான பல வேறு கலைகளிலும் அகஸ்தியர் பல நூல்கள் செய்தார் என்பதும் தமிழர்களின் நம்பிக்கை தான். 'குறுமுனி மேல் பெருஞ் சுமை!' என்று நாம் அதிசயிக்கிறோம். ஆனால் அகஸ்தியர் கதைகளின் உட் பொருள், பழங் காலத்தில் ஒரு கூட்டத்தினரின் பகீரத முயற்சிகளைக் குறிக்கக் கூடுமல்லவா?

கடவுள் — தத்துவம்

இப்படி யெல்லாம் அகஸ்தியரைக் குறித்து எண்ணமிடும் நாம், இனி அகஸ்தியர் ராமனைக் குறித்து என்ன நினைக்கிறார் என்று பார்க்கலாம்:




'விண்ணினில், நிலத்தினில்
விகற்ப உலகில், பேர்
எண்ணினில், இருக்கினில்,
இருக்கும்என யாரும்
உள்நினை கருத்தினை
உறப்பெறுவனால், என்
கண்ணினில்!' எனக்கொடு
களிப்புறு மனத்தான்.

[விண்ணினில் — வானத்தில். விகற்ப உலகில் — வேறுபட்ட பூதங்களிலும், அவைகளால் ஆன எத்தனையோ பேத உருவங்களிலும். பேர் எண்ணினில் — (உலகங்களெல்லாம் வியாபித்திருக்கும்) பெரிய எண்ணம் அல்லது அகண்ட மனத்திலே. இருக்கினில் — ரிக்வேதம் போன்ற வேத நூல்களில். யாரும் — அறிஞர் யாவரும். உள்நினை கருத்தினை — உள்ளத்தில் உணர்கின்ற கருத்தாகிய கர்த்தாவை அல்லது கடவுளை. உறப்பெறுவன் என் கண்ணினில் — என் கண்களாலேயே (இன்று) நான் பார்க்கப் பெறுவேன். எனக்கொடு — என்று (எண்ணிக்) கொண்டு.]

கடவுள் எங்கும் வியாபித்து எல்லாவற்றையும் கடந்து நிற்பவரல்லவா? விண்ணில் இருக்கிறார் என்றால், மண்ணிலும் நிறைந்திருக்கிறாராம். வேறுபட்ட பூதங்களில் (Elements) எல்லாம், அவற்றாலாகிய எண்ணிறந்த பேத உருவங்களில் எல்லாம், நிறைந்திருக்கிறாராம்.

உலகங்கள் எல்லாம் ஊடுருவிக் கிடந்து எல்லாவற்றையும் பொற் சரடு கோக்கும் மணிகளைப்போல் கோத்து நின்று ஆளும், ஆட்கொள்ளும் பெரிய எண்ணத்திலும்—அன்பு மயமான தனிப்பெருந் தாயுள்ளத்திலும் (பேர் எண்ணினில் a Supreme loving will)—இருக்கிறாராம்.

உள்ளொளி-இலக்கியங்களான வேதங்கள், கீதைகள், பைபிள்கள் முதலான சமய தத்துவ நூல்களிலும் கடவுளை அறிந்து அனுபவிக்கமுடியுமாம். 'இப்படியெல்லாம் பேரறிஞர் யாவரும் தங்கள் உள்ளத்தில் நினைக்கிறார்களே, அந்தக் கருத்தை, அந்தக் கடவுள் - தத்துவத்தைக் கண்ணால் பார்க்கப் போகிறேன், ராமனைப் பார்க்கும்போது — ஆஹா, என்ன பாக்கியம் பெறுவேன்!' என்று ஒரே களிப்புக் கடலில் மிதந்து கொண்டிருக்



கிறது தமிழ் முனிவரின் தத்துவ ஞான உள்ளம். ராமனது வாழ்க்கையும் தியாகமும், இந்த அவதார விஷயமாக அகஸ்தியரின் உள்ளொளி காட்டிய தற்கு, உட்குரல் கேட்டதற்குச் சான்ருகி விட்டன.

ராம - அகஸ்தியர் சந்திப்பு தெய்வப் பண்பாடுகளின் சந்திப்பாகும்! தமிழ் முனிவரின் தத்துவ ஜீவன் துடிக்கக் காண்கிருேம் இப்பாட்டிலே.

ஆனந்தக் கனவு

இப்படி ஆனந்த அலைகளுக்கிடையே மிதந்து வருவதுபோல் வந்து கொண்டிருக்கும் அகஸ்திய ருள்ளத்திலே ஆனந்தக் கனவுகள் தோன்று கின்றன.


பேரறிவாளர்கள் — படைப்புக் கடவுளான பிரம்மதேவனைப் போல் கலா சிருஷ்டி செய்யக்கூடிய பேரறிவாளர்கள் — ஞான நெறியிலே கட வுள்-தத்துவத்தைக் காண வேண்டுமென்று எத்தகைய முயர்சிகளை மேற் கொள்ளுகிருர்கள்! நாலு வேதங்களையும், அவற்ருேடு இசைந்த வேறு பல நூல்களையும் எப்படி யெல்லாம் ஆராய்ந்து பார்க்கிருர்கள்! தங்கள் பரந்த அனுபவ ஞானத்திலே வைத்து எவ்வளவு அழுத்தமாக ஆராய்கிருர்கள்! எவ்வளவு காலமாக விடா முயர்சியுடன் ஆராய்கிருர்கள்! அப்படி யெல் லாம் ஆராய்ந்து பார்த்தாலும் கடவுள் என்ற அந்தப் பொருளை அறிந்து கொள்ள முடிகிறதா? 'அத்தகைய பரம்பொருள் எனக்கு நேர் நின்று முகமகமாய் உரையாடப் போகிறதே, ராம சொரூபத்தில்!' என்று ஓர் ஆனந்தக் கனவு. இப் பகற் கனவை இதோ பாருங்கள், பாடல் வடிவத் திலே:

'இரைத்தமறை நான்கினொ(டு),
இயைந்தபிற யாவும்,
நிரைத்தநெடு ஞானநிமிர்
கல்லின்நெடு நாள்இட்(டு)
அரைத்தும்,அய னுலும்அறி-
யாதபொருள், நேர்நின்(று)
உரைக்குதவு மால்!'எனும்
உணர்ச்சியின் உவப்பான்.

[இரைத்த மறை — வேகத்தோடு உண்மையைக் கோஷிக்கும் வேதம். இயைந்த பிற யாவும் — அந்த மறை நூல்களோடு இசைந்த மற்ற எல்லா நூல்களையும். நிரைத்த நெடு ஞானம் — நீண்ட காளாக ஒழுங்கு படுத்தி வைத்திருந்த அனுபவ ஞானமான. நிமிர் கல்லின் — ஒரு பெரிய குழி அம்மியில். அயன் — பிரம்மதேவன். உரைக்கு உதவும் — உரையாடி உதவப் போகிறது.]

படிக்கப் படிக்க, அந்தப் படிப்பை யெல்லாம், நீண்ட காளாக வரிசைப் படுத்தி வைத்திருக்கும் அனுபவ ஞானமாகிய அம்மியில் இட்டு அரைத்துப் பார்க்க வேண்டுமாம். இதுதான் உண்மையான ஆராய்ச்சி யென்றும், இத்தகைய ஆராய்ச்சிக்கும் எட்டாதது பரம்பொருள் என்றும், அந்தப் பொருள் தானே வந்து அருள் செய்யு மென்றும், 'கல்வியில் பெரியார்' என்று போற்றப் பெறும் கவிஞன் கூறுவது ஆழ்ந்த சிந்தனைக்கு உரியது.

இத்தகைய தத்துவப் பெருங் கனவுகளைக் குழந்தைபோல் ஆகித் தான் காண இயலும். 'நீங்கள் சிறு குழந்தைகளாக மாறிப் பிறந்தா லொழிய இறைவனது பரமபத ராஜ்யத்திலே பிரவேசிக்க முடியாது' என்று கிறிஸ்து பெருமான் உறுதியாகச் சொல்ல வில்லையா? குறுமுனிவ ரான தமிழ் முனிவரை அத்தகைய ஞானக் குழந்தையாக்கிக் காட்டுவது கம்பனது அதிசயக் கலா சிருஷ்டிகளில் ஒன்று.



பி. ஸ்ரீ.

223. கண்டனன் இராமனை

'கல்வியிற் பெரியோன்' என்றும் பெயர் பெற்றிருந்தான் கல்லாக் கலையாகிய கவிதையிற் பெரியோன். வாழ்க்கையைக் கலையாகப் பயின்றதோடு வேறு பல கலைகளையும் ஒருவாறு ஸாரமாக அறிந்திருந்தான் என்று கருதலாம். கவிதையுடன் தொடர்பு கொண்ட சங்கீதம், நடனம் ஆகியவற்றில் பயிற்சியும் இருந்ததென்று ஊகிக்க இடமுண்டு. சித்திரம், சிற்பம் என்றால் ஒரே பைத்தியம்தான். இத்தகைய பெருங் கலைஞன் சமய ஞானியாகவும் பரம பக்தனாகவும் விளங்கினான் என்பதற்கு நூல் முழுவதும் சாட்சி.

வைத்திய ஞானம்

இம்மகா கவி அக்காலத்து வைத்திய சாஸ்திரத்தையும் ஒருவாறு அறிந்திருக்க வேண்டும். குழி அம்மியில் மருந்து அரைப்பது நாட்டு வைத்தியத்தில் ஒரு முக்கிய அம்சம். இதை நன்கு கவனித்திருந்ததால் தான், 'குழி அம்மியில் மூலிகை முதலியவற்றை இட்டு அரைப்பது போல் கற்பதையும் கேட்பதையும், நீண்ட நாளாக வரிசைப்படுத்தி வைத்திருக்கும் உறுதியான அனுபவ ஞானம் என்ற அம்மியில் இட்டு அழுத்தமாக அரைப்பதே ஆராய்ச்சி' என்கிறான். 'ஆராய்ச்சி' என்பதற்குத்தான் எவ்வளவு அருமையான சூத்திர விளக்கம்!

அடுத்த பாட்டிலும் கவிஞனது மருத்துவ அறிவு நன்கு வெளிப்படுகிறது.

'உய்ந்தனர் இமைப்பிலர்;
உயிர்த்தனர் தவத்தோர்;
அந்தணர் அறந்நின்நெறி
நின்றனர்கள் ஆனார்;
வெந்திறல் அரக்கர்விட
வேர்முதல் அறுப்பான்
வந்தனன் மருத்துவன்'
எனத்தனி வலிப்பான்



[உய்ந்தனர் — பிழைத்தார்கள். இமைப்பிலர் — இமையாதவர் என்று சொல்லப்பெறும் தேவர்கள். உயிர்த்தனர்-உயிர் பெற்றார்கள். அந்தணர் — (இங்கே) இல்லறத்திலுள்ள அருளாளர்கள். வெந்திறல் அரக்கர்—கொடிய வலிமையைக் கொடுமை செய்வதில் உபயோகிக்கும் அரக்கர். விட வேர் — விஷ வேர்கள். முதல்—அடியோடு. அறுப்பான் — அறுப்பதற்கு. தனி வலிப்பான் — ஒப்பற்ற உறுதி அல்லது துணிவுடன் நிற்கிறார்.]

என்ற பாட்டில் தமிழ் முனிவர் ராமனை ஒரு மருத்துவனாகக் கருதுவதைப்பாருங்கள்.

லட்சிய வைத்தியன்

ராமன் என்ற மருத்துவன், அரக்கர் என்ற விஷ வேர்களை அடியோடு பறித்துக் களைந்து சமுதாயத்தைக் காப்பாற்றப் போகிறான் என்று துணிகிறார் அகஸ்தியர். ராமனது வைத்தியத்தால், (அரக்கர்களுக்கு அடிமைகளாகி விட்ட) தேவர்கள் பிழைத்துப் போவார்களாம் — விடுதலை பெறு



வார்களாம். தவ ஒழுக்கத்திலிருந்த துறவிகளுக்கு அத் தவநெறி துறக்க நேர்ந்ததால் உயிரே போன மாதிரி இருந்தது — அந்த உயிர் அவர்களுக்கு வந்து விட்டதாம். இல்லறத்திலிருந்து கொண்டே ஜீவகாருண்ய உணர்ச்சியுடன் வாழ்ந்த அறநெறிச் செல்வர்கள் அறம் துறந்தவர்களாய் இருந்தார்கள், அரக்கர் கொடுமையால் — அவர்களும் அறநெறிக்குத் திரும்பி விட்டார்களாம்.

அரக்கர்கள் கொடிய திறமை வாய்ந்தவர்கள் (வெந்திறல் அரக்கர்). 'அரக்கர் திறமை வேண்டியது தான்; ஆனால் ராட்சஸ பலத்தை ராட்சஸரைப் போல் உபயோகிப்பது தான் கொடுமை' என்றார் ஓர் ஆங்கிலக் கவி. ராவணாதி ராட்சஸர்களின் 'வெந்திறல்' விஷவேர்களாகச் சமுதாயத்திற்குள் ஓடி எங்கெங்கும் ஆழ்ந்து புகுந்திருந்ததென்று கம்பன் வருணிக்கிறான். அத்தகைய விஷ வேர்களை அடியோடு அறுத்தெறிந்து சமுதாயத்தைப் பாதுகாக்கச் சமுதாய ரட்சகனாகிய மருத்துவன் ராம சொரூபத்தில் வந்து விட்டானாம்.

உடம்பில் ஒரு கொடிய நோய் புகுந்து கொண்டு தன் விஷத்தை இரத்தத்திலும் எலும்பிலும் புகுத்தி விடக் கூடும். தக்க வைத்தியம் நோயை வெளிப்படையாகப் போக்குவது மட்டுமன்று; அதனால் உடம்பெங்கும் பரவியுள்ள விஷத்தையும் வேரறக் களைந்து பூர்ண ஆரோக்கியம் அளிப்பதே சரியான வைத்தியம். இப்படியே சமுதாய உடலிலும் ராட்சஸக் கொடுமைகளும் கொள்கைகளும் புகுந்து பண்பாடு, ஒழுக்கம் முதலியவற்றுக் கெல்லாம் கேடு செய்யக்கூடும். இத்தகைய சமுதாய நோயை அடியோடு போக்குவதற்கு உயர்ந்த லட்சியத்தோடு கூடிய ஒரு மகாவீரன் தோன்ற வேண்டும். அத்தகைய அதிவீரன் ராமன் என்பது தமிழ் முனிவரின் அபிப்பிராயம்.

சமுதாயம் எப்படிச் சீரழிந்து போயிருந்தாலும் மகத்தான சக்தி வாய்ந்த அதி வீரன் ஒருவனால் உய்ந்து போவது நிச்சயம். இது அகஸ்தியரின் நம்பிக்கை — கவிஞனின் நம்பிக்கை. மகாத்மா காந்தியின் காலத்தவரான நமக்கும் இந்த நம்பிக்கை விளங்கக் கூடியதுதான்.

'உய்ந்தனர்' என்ற தொடக்கமே அகஸ்தியரின் நம்பிக்கையை வலியுறுத்தத் தொடங்குகிறது; 'உயிர்த்தனர்', 'நின்றனர்கள் ஆனார்' என்று மேலும் மேலும் சென்ற காலத்தில் கூறுவதும்



அந்த நம்பிக்கையை உறுதிப்படுத்துகிறது. இச் செய்யுளைப் படிக்கப் படிக்க (பாடப் பாட), அகஸ்தியரின் நம்பிக்கை நம்மையும் தொத்திக் கொள்ளும் என்று தோன்றுகிறது.

இனி, இத் தெய்வ வைத்தியனை 'வான மழை' என்கிறார் அகஸ்தியர். 'ராமனுக்கு முடி சூட்டலாமா?' என்று தசரதர் கேட்டதும், 'மேகம் பருவ மழை பொழிகிறது என்றால் மறுப்பவருண்டோ?' என்று விடை கிடைத்ததாம். குடியானவர்களுக்குப் பருவ மழை போலவே பொது மக்களுக்கு ராம பட்டாபிஷேகம். ராமன் முடி துறந்து காட்டுக்குப் புறப் பட்டதும், 'மேகம் பொழியாமல் ஏமாற்றிப் போய் விட்டதே!' என்ற கொதிப்பு ஏற்பட்டதாம். இப்போது அகஸ்தியர், 'நாடு செய்யாத பாக்கி யம் காட்டுக்குக் கிடைத்து விட்டது!' என்று குளிர்ந்து போகிறாராம்:

'வானமழை வந்த'தென
　　முந்துறு மனத்தான்.

[முந்துறும் — முற்படுகின்ற.]

காட்சி

ராமன் சமீபத்தில் வந்து விட்டான், நெருங்கி வந்து விட்டான், பக்கத்தில் வந்து விட்டான். எதிர்கொண்டு வந்து பார்த்து விட்டார் முனி வர். ஆனால் கண்ணீர் மறிக்கிறது இடைச்சுவராக வந்து!

கண்டனன் இராமனை
　　வரக்,கருணை கூரப்
புண்டரிக வாள்நயனம்
　　நீர்பொழிய நின்றான்,
எண்திசையும் ஏழுலகும்
　　எவ்வுயிரும் உய்யக்
குண்டிகையி னில்பொருவில்
　　காவிரி கொணர்ந்தான்.


[கூர—மிகுதியாக. புண்டரிக வாள் நயனம்—தாமரை மலர் போன்ற ஒளி மயமான கண்கள். குண்டிகை—கமண்டலம். பொருவில்—ஒப்பில்லாத.]

ராமனை அருகே கண்டுகொண்டதும், முகமுகமாய் உரையாடக் கூடிய வண்ணம் கண்டதும், அகஸ்தியருக்கு உள்ளமெல்லாம் உருகிக் கண்ணீராய்ப் பொழிவது போலத் தோன்றுகிறது. அடியெடுத்து வைக்க வும் இயலாமல் அப்படியே நின்றார். அப்படிக் கண்ணீர் வடிப்பது தவிரப் பேசவும் தெரியவில்லை, தமிழ்க் கடல் குடித்த முனிவருக்கு. கண்ணீரால், தெளிவாகக் கண்டு கொண்டிருக்கவும் முடியவில்லை யென்றால், ராமனைக் கண்ட தமிழ் முனிவர் பட்ட பாட்டை என்னென்பது?

இதற்குமுன் குறுமுனிவருக்குக் கிடைத்திருக்கும் பல பெருமைகளு டன், இப்போதும் ஒரு பெருமை அளிக்கிறான் கவிஞன். மலைகடந்த, கடல்குடித்த, உலகைச் சமனாக்கிய, தமிழால் உலகளந்த பெருமைகளுடன் காவிரி கொணர்ந்த பெருமையும் சேர்ந்துகொள்கிறது.

கம்பன் காவிரிதீர வாசி, சோழவள நாட்டான். தமிழ் நாட்டின் உண வுப் பஞ்சம் தீரச் சோழவள நாட்டைச் 'சோறு'டைய தாக்கிக் கவலை யின்றி அறிவுப் பயிரும் தழைத்தோங்குமாறு உதவிய காவேரியைத் தான் எவ்வளவு தூரம் ஆசைவெள்ளம் பெருகக் குறிப்பிடுகிறான்:

எண்திசையும். ஏழுலகும்
　　எவ்வுயிரும் உய்யக்
குண்டிகையி னில்பொருவில்
　　காவிரி கொணர்ந்தான்.



பி. ஸ்ரீ.

224. வரவேற்பு வைபவம்

கோசல நாட்டைத் தாய்ப்பாலாக ஊட்டி வளர்த்தது சரயு நதி என்று கூறும் கவிஞன், தமிழகத்தின் உயிராகிய காவிரியாற்றை விசேஷ அபிமானத்துடன் குறிப்பிடுவது கவனிக்கத் தக்கது. அகஸ்தியர் பூமியைச் சமன் செய்து சீர்பெறச் செய்ய வேண்டுமென்று தென்திசைக்கு வரும் போது கமண்டலத்தில் கங்கை நீரைக் கொண்டு வந்தாரென்றும், குடகு மலைச் சாரலுக்கு வந்ததும் ஒரு காகம் வந்து கமண்டலத்தைக் கவிழ்த்து விட அது காவிரியாக ஓடியதென்றும், விநாயகக் கடவுளே அப்படிக் காக்கை யுருவில் வந்து தமிழகம் நீர்வளமும் செல்வப் பெருக்கமும் அடையு மாறு உபகரித்தாரென்றும் தமிழ் நாட்டிலே புராணக் கதை வழங்குகிறது. இக்கதையைப் பாடும் கம்பன், புராணக் கதையை அப்படியே அந்தச் சொல் லளவில் நம்பித்தான் பாடுகிறானென்று கருத முடியாது.

காவிரியில் கரை அமைத்தும், அணை தடுத்தும், கால்வாய்கள் தோண் டியும், குளம் வெட்டியும் விவசாயத்திற்கு நீண்ட காலமாக உழைத்து வந்திருக்கும் தமிழர்களின் பகீரதப் பிரயத்தனங்களையும் மனசில் வைத்து அனுபவித்துக் கொண்டுதான்,

எண்திசையும் ஏழுலகும்
எவ்வுயிரும் உய்யக்
குண்டிகையி னில்,பொருவில்
காவிரி கொணர்ந்தான்

என்று பாடி யிருக்க வேண்டும்.

* * * *

ராமனைக் கண்ணுற்றதும் ஆனந்தக் கண்ணீர் பொழிய அப்படியே நின்றுவிட்ட முனிவரை ராமன்வந்து அடிபணிகிறான். அகஸ்தியரின் கருணை நிறைந்த கண்கள் ஒரு புதிய ஒளி பெறுகின்றன. முனிவர் ராமனை அன் போடு தழுவிக்கொள்கிறார். வார்த்தை ஒன்றும் சொல்லவில்லை, சொல்ல

முடியவில்லை. இதயத்தில் அன்பும் கருணையும் அப்படிப் பொங்கி நிறைந்து விட்டன.

நல்வரவு, (பேச்சும் பேசாத பேச்சும்)

ஆனந்தக் கண்ணீர் பொழியும் கண்களால் தான் நல்வரவு கூறுகிறார் முதன் முதல். பிறகு மெள்ளத்தான் உபசார வார்த்தைகள் வருகின்றன:

நின்றவனை, வந்தநெடி
யோன், அடி பணிந்தான்;
அன்றவனும் அன்பொடு
தழீஇ, அழுத கண்ணால்
'நன்றுவர(வு)' என்று, பல
நல்லுரை பகர்ந்தான்,
என்றும்உள தென்தமிழ்
இயம்பி, இசை கொண்டான்.

[நெடியோன் — நெட்டையாகவும் கம்பீரமாகவும் உள்ள ராமன். அன்று அவனும் — அப்போது அம்முனிவனும். தழீஇ — தழுவி. நல்லுரை — உபசார வார்த்தைகள். பகர்ந்தான் — சொன்னான். என்றும் உள — அநாதி காலமாக உள்ள. தென்தமிழ் — அழகிய தமிழ். இயம்பி — சொல்லி. இசை கொண்டான் — புகழ் பெற்றவராகிய அகஸ்திய முனிவர்.]

திகைத்து நின்ற அகஸ்திய முனிவரை வடக்குத் திசையிலிருந்து வந்த ராமன் அடிகளில் விழுந்து பணிந்ததும், அகஸ்தியர் அப்படியே அவனைத் தூக்கி யெடுத்துத் தழுவிக் கொள்கிறார். தழுவிக் கொண்டதும் ஆனந்தக் கண்ணீர் அழுகையாகப் பொங்கி விடுகிறது.

தமிழ் ஆராச்சியையே பொழுது போக்காகவும் தவமாகவும் கொண்டிருந்த அகஸ்தியருக்கும் அச் சந்தர்ப்பத்தில் பேசத் தெரியவில்லையாம். வாய் பேசாத தமிழை 'உன் வரவு நல்வரவு' என்று கண்களே பேசி விடுகின்றனவாம். பிறகு மன அமைதி ஏர்பட்டதும் அழகான, இனிமையான, குளிர்ந்த தமிழால் ராமனுள்ளங் குளிரப் பலவிதமாய் உபசாரம் சொல்லுகிறார் தமிழ் முனிவர்.



குறுமுனிவரான அகஸ்தியரை நெடியோனாகிய ராமன் நெருங்கி வந்து அடிபணிந்த அந்த அழகை,

நின்றவனை, வந்தநெடி
யோன், அடி பணிந்தான்

என்று கவிஞன் வெளியிடுவது தான் எவ்வளவு சாதுரியமாய் இருக்கிறது! ராமனை 'நெடியோன்' என்று குறிப்பிட்டு 'நின்றவனைக்' குறுமுனி என் என்பதைச் சொல்லாமல் விட்டு வைத்திருக்கும் சாதுர்யம் கவிஞனின் தமிழ்ப் பண் பாட்டுக்கு எத்தனையோ சான்றுகளில் ஒன்றாகும்.

சாதாரண மக்கள் அகஸ்தியரே தமிழையும் கொண்டு வந்ததாகச் சொல்லுகிறார்கள். தமிழையும், தென்றலையும், தாமிரபருணியையும், காவிரியையும் ஒரே மூட்டையாகக் கட்டிக் கொணர்ந்து குடகு மலைச் சாரலிலும், பொதிய மலைச் சாரலிலும் உதறிவிட்டாராம் அகஸ்தியர். கம்பனோ,

என்றும்உள தென்தமிழ்
இயம்பி இசைகொண்டான்

என்கிறான். இதே கருத்தைத்தான்,

தழற்புரை சுடர்க்கடவுள்
தந்ததமிழ் தந்தான்

என்ற செய்யுள் – அடியும் வெளியிடுகிறது. 'கடவுள் தந்த தமிழ்' என்றாலும் அநாதி காலமாக உள்ள தமிழ் என்றுதானே பொருள்? அத்தகைய தமிழுக்கு ஒரு மறுமலர்ச்சி அளித்தவர் அகஸ்தியர் என்பதுதான் கம்பன் கருத்தென்று ஊகிக்கலாம்.

மௌனத்தாலும் பேச்சினாலும் உபசரித்த பின் ராமனை மகரிஷி தம் ஆசிரமத்திற்கு அழைத்துச் செல்லுகிறார். அப்பொழுது அகஸ்தியரது குரு குல மாணாக்கர்களான வேதியர்கள் பலவேறு வேத மந்திரங்களைக் கோஷிக்கிறார்கள். சீடர்களான முனிவர்கள் பூர்ண கும்பங்களில் தீர்த்தம் கொணர்ந்துபுரோட்சிக்கிறார்கள். பிறகு அவர்கள்



அழகிய மலர்களைத்தூவ, ராமனை அப்படியே அகஸ்தியர் தமது சோலைக்குள் அழைத்துக் கொண்டு போகிறார்.

அழகான வரவேற்பு

இந்த வரவேற்பு - வைபவத்தின் அழகை இப்பாட்டும் பண்ணழகும் எவ்வளவு அதிசயமாய்ப் படம் பிடித்துக் காட்டுகின்றன :

வேதியர்கள் வேதமொழி
வேறுபல கூறிக்
காதல்மிக நின்(று), ஒளிர்
கமண்டலுவின் நன்னீர்
மாதவர்கள் வீசி, நெடு
மாமலர்கள் தூவப்,
போதுமணம் நாறுகுளிர்
சோலைகொடு புக்கான்.

[காதல் மிக நின்று — அன்புக்காதல் மிகுதியால் தடைப்பட்டு நின்று. ஒளிர் கமண்டலு — அழகிய கமண்டலங்கள். மாதவர்கள் (சீடரான) முனிவர்கள். நெடு மாமாலர்கள் தூவ—நீளமாய் வழி நெடுக அழகிய பூக்களைத் தூவிக்கொண்டே வர. போதுமணம் நாறு — பூக்களின் வாசனை வீசுகிற. கொடு புக்கான் — (அகஸ்தியர்) அழைத்துக் கொண்டு போனார்.]

அகஸ்தியருடைய சீடர்கள் இருவகையினர் என்று கருதலாம். வேதம், தமிழ் முதலியவை கற்கும் குருகுல மாணக்கர்கள் தங்கள் கல்விப் பயிற்சி இனிது முற்றுப் பெற்றபின் இல்லறம் நடத்தப் போய் விடுவார்கள். சீடர்களான முனிவர்களோ எப்போதும் தவ ஒழுக்கத்திலும் ஆராய்ச்சிகளிலும் நிலைபெற்றிருப்பார்கள். முந்திய வகையினரை 'வேதியர்' என்றும், பிந்திய பிரிவினரை 'மாதவர்' என்றும் கவிஞன் குறிப்பிடுகிறான்.

ரிக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம் என்ற வேதங்களின் பல சாகைகளைச் சார்ந்த வேதியர்கள் பலவேறு வேதவாக்கியங்களைச் சொல்லி ராமனை வாழ்த்தி வரவேற்கத் தொடங்கினார்கள். ராம சௌந்தரியத்தில் ஈடுபட்டுக் காதல் மேலிட்டதால் வேத மந்திரங்கள் தடைப்பட்டு நின்று விடுகின்றனவாம்.


வேதியர்கள் இந்தப் பாடுபட, கமண்டலமும் கையுமாக வந்த முனிவர் குழாம் கமண்டல தீர்த்தத்தை மாங்குழை கொண்டு தெளிப்பதும், பூக்களைத் தூவுவதுமாக மெள்ள நடக்க, ராமனும் மெள்ளக் கம்பீரமாக நடந்து வருகிறான்—வந்து, அகஸ்தியருடன் சோலைக்குள் பிரவேசிக்கின்ற அழகை என்னென்பது ?

கம்பன் பாட்டைப் பாடப் பாட, அந்த அழகு அப்படியே நமக்கும் புலனாகிறது. நாமும் வேதியர்களுடன் ' காதல் மிக நின்று'ம், மாதவர்களுடன் ' மாமலர்கள் தூவி ' யும் (மானஸீகமாகத்தான்) இந்தக் காட்சிக்குள் அபேதமாய்க் கலந்து கொண்டது போலத் தோன்றுகிறது.

கம்பனது பாவனைத் திறத்திலே பிறந்த கவிதைப் போரற்றல் செய்து காட்டும் அற்புதம் இது. அகஸ்தியர் தமிழ், கம்பன் தமிழாகி இயற்றிக் காட்டும் இந்திர ஜாலம் இது.

இந்திர ஜாலமெல்லாம் - கவியில்
இயற்றிக் காட்டிடுவோன் ;
மந்திரச் சொல்லாலே - உள்ளம்
மயங்கச் செய்திடுவோன்

என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை பாடுவது உபசாரமன்று, உண்மைதான். 'வேதியர்கள் வேதமொழி வேறு பல கூறி......' என்ற இக்கவிதை கம்பனின் மந்திரக் கவிதை தானே !



பி. ஸ்ரீ.

225. ஆசிரமத்திலே

அந்தச் சோலையில் அழகுகள் பொருந்தி யிருந்தன. எனினும், ராமன் பிரவேசித்தபோது அங்கே அதற்கு முன் ஏதோ ஒரு குறை இருந்ததாகவும், அது இப்பொழுதுதான் நீங்கி விட்டதாகவும் தோன்றியது. ராமன் பிரவேசம் அவ்வளவு பொருத்தமாகவும் இனிமையாகவும் இருக்கிறது.

குறை முடிந்தது

அகஸ்திய ஆசிரமத்தில் விருந்து நடக்கிறது, ராமன் முதலானவர்களுக்கு. எப்படிப்பட்ட விருந்து? வனபோஜனம் தான், மர நிழலில்தான் விருந்திற்குப் பின் முனிவர் ஆனந்தமாக அமர்ந்து தம் உணர்ச்சியை விருந்தாளியிடம் தாராளமாக வெளியிடுகிறார். அதுவே ஓர் ஆனந்த விருந்தாகிறது, அலைந்து திரிந்து வந்த ராமனுக்கு:

பொருந்தஅம லன்பொழில்
அகத்(து)இனிது புக்கான்;
விருந்(து)அவன் அமைத்தபின்,
விரும்பினன் விரும்பி,
'இருந்தவம் இழைத்தனன(து)
இல்லிடையின் வந்(து),என்
அருந்தவம் முடித்தனை
அருட்கரச!' என்றான்.

[அமலன் - குற்றமற்ற ராமன். பொழில் அகத்து - அகஸ்தியரது ஆசிரமச் சோலைக்குள்ளே. புக்கான் — புகுந்தான். இருத்தவம் — பெருந்தவம். இழைத்த — செய்த. இல்லிடையின் — இல்லத்திலே, ஆசிரமத்திலே. அருட்கு அரச — அருளுக்கு அரசனாகிய தியாக மூர்த்தியே.]

ஆசிரமத்திற்கும் குறை முடிந்தது; அகஸ்தியருக்கும் குறை முடிந்ததாம். அதற்கு அழகுக் குறை; அவருக்குத் தவக் குறை. இரு குறைகளையும் ஒருங்கே நிறை செய்கிறான், அருளுக்கும் அழகுக்கும் அரசாகிய ராமன்.

ராமனது அருளை, தியாகத்தை எண்ணிப் பார்த்த மாத்திரத்தில் அருளாளராகிய தமிழ் முனிவருக்கும் அதிசயம் ஏற்படுகிறது. 'நம்முடைய அருந்தவம் எல்லாம் இந்த அரசிளங்குமரனின் அரும் பெருந் தியாகத்திற்கு ஈடாகுமா?' என்று எண்ணத் தோன்றுகிறது. தவமும் தாமுமாக வாழ்ந்த ஆசிரமச் சோலையில் ராமன் அடி வைத்ததே தவப்பயன் தான் என்று தோன்றியது. 'என் அருந்தவம் இனிது முற்றுப் பெற்றது, உன் வருகையால்! தவம் பலித்தது, அருளின் அரசு என்னைத் தேடி வந்து விட்டதால்!' என்கிறார் அகஸ்தியர்:

'இருந்தவம் இழைந்தனன(து)
இல்லிடையின் வந்(து),என்
அருந்தவம் முடித்தனை
அருட்கரச!' என்றான்.

உண்மை – வெற்றி

உபசாரம் மட்டுமன்று; உள்ளத்தை அப்படியே வெளியிடுவதால் உண்மையான வார்த்தை. ராமன் இதற்கு என்ன பதில் சொல்லுகிறான்? அவனும் அப்படியே தன் உள்ளத்தின் உண்மை – ஒளியை வெளியிடுகிறான். அவ்வொளியின் சுடர்ப்பொறிகளாக விழுகின்றன வார்த்தைகள்:

என்றமுனி யைத்தொழு(து)
இராமன், 'இமையோரும், —
நின்றதவம் முற்றும்நெடி
யோரின்நெடி யோரும்,
உன்தன்அருள் பெற்றிலர்கள்;
உன்அருள் சுமந்தேன்,
வென்றனன் அனைத்துலகும்!
மேல்இனிஎன்?' என்றான்.

[இமையோரும் - தேவர்களும். நின்ற தவம் முற்றும் - மேற்கொண்ட தவத்தை முடித்துக் கொண்ட. நெடியோரின் நெடியோரும் - பெரியோர்களுக்கும் பெரியோர் என்று சொல்லத் தக்கவர்களும். பெற்றிலர்கள் - பெற்றார்களில்லை.]

''தவம் செய்து கொண்டிருந்த என்னிடம் என் ஆசிரமம் தேடி வந்து என் குறை முடித்துத் தவத்தை முடிவு பெறச் செய்தாய், அருளரசே!' என்ற தமிழ் முனிவரின் அந்த அருமையான வார்த்தைக்கு ராமன் விடையும் எவ்வளவு அழகாய், உண்மையாய் வருகிறது, பாருங்கள். 'தேவர்களும் நெடுந்தவப் பெரியோர்களும் பெறாத உன்னருளை இன்று நான் பெற்றது மட்டுமா? உன் அருள் சுமந்தேன்!' என்கிறான். இதுவே தனக்கு வெற்றி— உலகமெல்லாம் வென்று விட்டது போன்ற ஒரு தனி வெற்றி என்கிறான். இப்படிச் சொல்லிவிட்டு, 'மேலே இனி நான் செய்ய வேண்டியது என்ன?' என்று அகஸ்தியரின் கட்டளையை எதிர்பார்க்கிறான்.

அகஸ்தியருடைய உள்ளம் புரிந்துவிட்டது. அந்த உள்ளத்தின் உண்மையை இந்த உள்ளத்தின் உண்மை அறிந்து கொண்டது. இனி உபசாரம் எதற்கு? மேலும் தவ முனிவர் தன்னைப் புகழாமலிருக்க வேண்டுமென்று எவ்வளவு நயமாகவும் வினயமாகவும் 'மேல் இனி என்?' என்று இனி

தான் செய்ய வேண்டியதைக் கட்டளை யிடவேண்டும் என்பதாகப் பிரார்த்திக்கும் ராமனை அகக் கண்ணால் உற்று நோக்குங்கள்.


தமிழ் முனிவரின் வார்த்தையும் ராமன் விடையும் கேவலம் பரஸ்பர முகஸ்துதி அல்ல. தமிழ் முனிவரின் இதயம் புகழ்ச்சியோடு அருளையும் பொழிந்தது ராமன் மீது — பாபநாசம் அருவி பொழிவது போலே. அந்தத் தமிழருவியில் மொத்துண்ட ராமனுள்ளம், அந்தப் பேரின்பத்தை, 'உன் அருள் சுமந்தேன்' என்று வெளியிடுகிறது. அந்த-இன்பத்தால் தெய்விக ஊக்கம் பெற்று, "உலகமெல்லாம் வென்றாகிவிட்டது; வந்த காரியமே முடிந்து போய் விட்டது!' என்ற மகா சக்தி வாய்ந்த மனநிலையுடன் அகஸ்தியரின் பணியை எதிர் நோக்குகிறது.

குதூகல சிகரம்

பிறகு அகஸ்தியர் சொல்லுகிறார்: 'நீ தண்டகாரணியத்திற்கு வந்திருக்கிறாய் என்று கேள்விப்பட்டதும், நிச்சயமாக இந்தத் திசையை மறந்து விடாமல் இங்கே வருவாய் என்று எனக்குத் தெரியும்; பேருவகையுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன், அப்பா!' — எவ்வளவு இயற்கையாகப் பொங்கும் உத்ஸாகத்திலே மிதந்து வருகிறது அகஸ்தியர் பேச்சு:

'தண்டக வனத்துறைதி
என்(று)உரை
தரக்கொண்(டு);
உண்டுவர(வு) இத்திசை
எனப்பெரி(து)
உவந்தேன்'

[உறைதி – நீ தங்கியிருக்கிறாய்.
உரைதரக் கொண்டு – சொல்லக்
கேட்டு அது கொண்டு.]




'இனி நீ இங்கே வசிப்பாயாக. பெரிய தவங்களை முடித்துக்கொள்வதோடு, கொடிய அரக்கர்கள் வருவார்களாயின், அவர்களை ஒழித்து எங்கள் மனத் துயரமும் துடைப்பாய். அப்படி யெல்லாம் செய்வதற்கு இது வாய்ப்பான இடம்தான்' என்று சொல்லும் முனிவர், ராமன் இசைந்து தம்முடனேயே வசிக்கப் போகிறான் என்றுதான் முதல் முதல் மனக் கோட்டை கட்டுகிறார்.

தமிழ் முனிவரின் உத்ஸாகம் இப்போது வெப்படித் தமிழிலே, தமிழ்ச் செய்யுளிலே பொங்கி வருகிறது பாருங்கள் :

வாழும்மறை ; வாழும்மனு
 நீதிஅறம் வாழும் ;
தாழும்இமை யோர்உயர்வர்,
 தானவர்கள் தாழ்வர்—
ஆழிஉழ வன்புதல்வ !
 ஐயம்இலை, மெய்யே ;
ஏழுலகும் வாழும்இனி ;
 இங்(கு)உறைதி' என்றான்.

[வாழும் மறை — வேதங்கள் வாழ்வு பெறும். மனு நீதி — மனு முதலானவர்கள் செய்த நீதி நூல்கள். தாழும் இமையோர் — அரக்கரால் தாழ்வடைந்து கொண்டிருக்கும் தேவர்கள். தானவர்கள் — அசுரர்கள். ஆழி உழவன்—சக்கிரவர்த்தியான தசரதர். மெய்யே — இது உண்மையே யாகும். உறைதி — வசிப்பாயாக.]

'வேதங்களுக்கும் தர்ம நீதிக்கும் வாழ்வு பிறந்துவிட்டது, நல்ல காலம் பிறந்துவிட்டது' என்று குதூகலப்படுகிறார் முனிவர். 'தாழ்ந்தவர் உயர, செருக்காலும் ராட்சஸ வலிமையாலும் ஆதிக்கம் புரிபவர் தாழ்ந்து விடுவார்கள். சந்தேகமில்லை ; இது சத்தியமாக நடக்கப் போகிறது. உலகமெல்லாம் வாழப் போகிறது !' என்று பேசும் குறுமுனிவர் இப்போது குதூகலத்தின் சிகரத்திலே நிமிர்ந்து நிற்கிறார். அந்தக் குறுமுனிவரின் பேருவகை அப்படியே உருவம் பெற்று விட்டது போலிருக்கிறது இச் செய்யுள். மீண்டும், மீண்டும் பாடிப் பாருங்கள்.



பி. ஸ்ரீ.

226. கொஞ்சும் தமிழ்

அகஸ்தியர் சொன்னபடி அந்த அழகிய சோலை சூழ்ந்த ஆசிரமத்தில் தங்குவது வசதியாகத்தான் இருக்கும். எனினும் அரக்கர்களை வெகு விரைவில் வதஞ்செய்ய வேண்டுமென்ற ராமனுடைய லட்சியம் நிறைவேறுவதற்கு அந்த இடம் அவ்வளவு செளகரிய மானதல்ல என்று ராமன் எண்ணினான். அரக்கர்கள் செருக்கித் திரிந்து தீமை செய்வதையே லட்சியமாகக் கொண்டிருக்கிறார்களென்றும், ராட்சஸ ராஜதானியாகிய லங்கையிலிருந்தும், கரதூஷணாதியர் தங்கியிருந்த ஜனஸ்தானத்திலிருந்தும் அவர்கள் வந்து உல்லாச சஞ்சாரம் செய்யக்கூடிய பிரதேசம் இன்னும் தெற்கேதான் இருக்கிறதென்றும், தண்டகாரண்ய முனிவர்கள் மூலமாகவும் அகஸ்திய சிஷ்யர்கள் மூலமாகவும் ராமன் கேள்விப் பட்டிருந்தானென்று கருதலாம். விரைவில் ராட்சஸவதம் நேர்ந்தால் தான் அந்தச் சாதுக்களுக்கும், உலகத்திற்குமே க்ஷேமம் என்று தீர்மானித்தவனாய், ராமன் அகஸ்தியரை நோக்கி, 'அரக்கர்கள் வரும் தெற்குத் திசையில் நான் முற்பட்டுப் போயிருப்பதே நலமென்று எனக்குத் தோன்றுகிறது. இனி உங்கள் விருப்பம் எப்படியோ அப்படியே நடந்துகொள்ளச் சித்தமாயிருக்கிறேன்' என்றான்.

பஞ்சவடி

அது கேட்ட அகஸ்தியர் திருப்தியடைந்து, 'நீ சொன்னது பொருத்தமானது தான்' என்று சொல்லிவிட்டு, ராமனுக்கு விசேஷமான அஸ்திர சஸ்திரங்களைக் கொடுத்து, அகண்ட கோதாவரிக்கரையிலுள்ள பஞ்சவடி என்ற பிரதேசத்தில் போய்த் தங்குமாறு விடை கொடுத்து அனுப்பினார்.

பஞ்சவடி என்றால் 'ஐந்து ஆலமரங்களின் தொகுதி' என்று பொருள். அந்த இடத்தை ஒட்டி வேறு மரங்களும் உண்டு; மணல் மேடுகளும் குன்றுகளும் சோலைகளும் உண்டு. இவையும், அகண்ட

கோதாவரியும் அந்தப் பிரதேசத்திற்கு விசேஷ வளமும் வனப்பும் தந்திருக்கின்றன.

ஓங்கும் ஒலி-மாளிகை

இப்போது, ராமனுக்குத் தமிழ்முனிவரின் வாக்குவளம் பஞ்சவடியை எப்படிச் சித்திரித்துக் காட்டுகிறது என்று பார்ப்போம் :

ஓங்குமரன் ஓங்கி,மலை
ஓங்கி,மணல் ஓங்கிப்,
பூங்குலை குலாவுகுளிர்
சோலைபுடை விம்மித்,
தூங்குதிரை ஆறுதவழ்
சூழல(து)ஓர் குன்றின்
பாங்கர்உள தால்உறையுள்
பஞ்சவடி, மஞ்ச !

[மரன் — மரம். பூங்குலை — பூக்கொத்துக்கள். புடை — பக்கங்களில். தூங்கு திரை — தொங்குகிற அலைகள். சூழலது — சுற்றிடங்களை உடையது. ஓர் — ஒரு. பாங்கர் — அருகில். உளதால் — உள்ளது. உறையுள் — இங்கே வசிக்கத் தக்க இடம்.]

எல்லாம் ஓங்குகின்றனவாம் பஞ்சவடியில். மரங்கள் ஓங்குகின்றன. மலை ஓங்குகிறது. மணல் மேடு ஓங்குகிறது.

ஓங்குமரன் ஓங்கிமலை
ஓங்கிமணல் ஓங்கி

என்று பாடும் போதே நம் மனமும் ஓங்குகிறது. அந்தக் காட்சிகளை நேரில் காணப்போகும் சீதாராம லட்சுமணர்களின் மனம் ஓங்கு மென்பதைச் சொல்லவும் வேண்டுமோ? அகஸ்தியர் சொல்லாமல் சொல்லும் அந்தக் குறிப்பைத்தான் இந்த ஒலிச் சித்திரம் எவ்வளவு அதிசயமாக நம் உள்ளத்திற்குள்ளே கொண்டு சேர்த்து விடுகிறது. ஆத்மாவைச் சிறை செய்யும் செங்கல் - சுண்ணும்பு நாகரிகம் அங்கே இல்லை. உள்ளத்தை ஓங்கச் செய்து ஆத்மாவையும் தனக்குரிய சுதந்திரத்துடன் ஓங்கச் செய்யும் அந்தப் பிரதேசம் சோலைகளுக்கும் பேர்போனது என்கிறார் முனிவர்.

விம்மும் சோலை, தவழும் ஆறு

பக்கங்களில் எல்லாம் குளிர் பூஞ்சோலைகள் விம்மி நிற்கின்றனவாம். அச் சோலைகளிலே குலாவுகின்றன பூங்கொத்துக்கள் என்கிறார் அகஸ்தியர். அவற்றோடு நெஞ்சும் கொஞ்சிக் குலாவ ஆசைப்படும் என்பது குறிப்பு.

அந்தச் சுற்றிடங்களில் ஆறு தவழ்ந்து போகிறதாம் — குழந்தை தவழ்ந்து விளையாடுவது போலே. அந்த ஆற்றோடு உள்ளமும் தவழ்ந்து விளையாட ஆசைப்படும் என்பது குறிப்பு. பஞ்ச வடியின் இச்சூழல் இயற்கைத் தேவியின் அழகு-நிலையமாக விளங்குகிறதல்லவா ?

பஞ்சவடி, மஞ்ச !

என்று அகஸ்தியர் முடிக்கும்போது, அந்த உள்ளம்—அந்தத் தமிழ்—ராமனோடு கொஞ்சுவது போலத் தோன்றுகிறது.



அன்னத்துடன் விளையாட அன்னம்

இவ்விதமாக வருணித்து வரும் தமிழ் முனிவர் மேலும் பேசுகிறார். இவர் நாவிலே தமிழ் இன்னும் நவழ்ந்து கொஞ்சிக் கொஞ்சிப் பேசுகிறது :

கன்னிஇள வாழைகனி
ஈவ,கதிர் வால்ன்
செந்நெலுள, தேமெழுகு
போதும்உள; தெய்வப்
பொன்னிஎன எாயபுனல்
ஆறுமுள, போதா
அன்னமுள, பொன்னி
வளோ
டன்பின் விளையாட !



[கன்னி இளவாழை - மிகவும் இளமையான வாழை மரங்கள். கனி ஈவ - கனிகளைத் தருவனவாகிய. கதிர் வாலின் செந்நெல் - அணில் வால் போன்ற கதிர்களோடு கூடிய செந்நெற் பயிர்கள். போது - மலர்கள். தெய்வப் பொன்னி - தெய்வத் தன்மையுள்ளதென்று கருதப்படும் காவிரி. எனலாய் - என்று சொல்லத் தக்க. புனல்ஆறு - வெள்ளத்தையுடைய நதி. போதா - பெருநாரைகள். பொன் இவளொடு - பொன் போன்ற இச் சீதா லட்சுமியுடன்.]

இப்படிப்பட்ட தமிழிசையைப் பருகி நம் உள்ளம் வெறி கொள்ளுகிறது. இந்த இசைச் சித்திரத்திலே, குலைதள்ளப் போகும் வாழைகளும், அந்த வாழைத் தோட்டங்களை அடுத்து வயல்களில் செந்நெற்கதிர்களும், வயல்களை யடுத்துத் தேனொழுகும் பூஞ்சோலைகளும், அருகே ஜீவநதியும், அதில் நாரைகளும் அன்னங்களும் எவ்வளவு இயற்கையாகத் தெய்விக வசீகரம் பெற்று நம் மனோபாவக் காட்சிக்கு இலக்காகின்றன!

'மிதிலைப் பொன்னாகிய இந்தச் சீதைப் பெண்ணுடன் அன்போடு விளையாடுவதற்கு அன்னங்களும் அங்கே இருக்கின்றன!' என்று பேசும் இடம், பஞ்சாக்கினி மத்தியில் கடுந் தவங்கிடந்து வற்றியுலர்ந்த உள்ளம் போலவா பேசுகிறது? 'முனிவரும் மனிதரே! இத்தமிழ் முனிவரோ பரம ரஸிகர்!' என்று சொல்லத் தோன்றுகிற தல்லவா? ராம லட்சுமணர்களுடைய வசதிகளைக் 'கவனிப்பதுடன் சீதைக்குப் பொழுது போக 'விளையாட்டுத் தோழிகள் வேண்டுமே' என்ற கவலையும் இவ்வுள்ளத்தில் இடம் பெறுகிறதென்றால், இம்முனிவர் பெருமானின் பெருந்தன்மையை, மனித நீர்மையை என்னென்பது?


விடை கொண்ட அழகு

இப் பெரியாரது சிந்தை தங்களைத் தொடர்ந்து வர, லட்சுமணனும் தொடர்ந்து வர, ராமன் சீதையோடு போகும் அழகைப் பாருங்கள்:

'ஏகி, இனி அவ்வயின்
 இருந்(து)உறைமின்' என்றான்;
மேகநிற வண்ணனும்
 வணங்கிவிடை கொண்டான்,
பாகனைய சொல்லியொடு,
 தம்பி,பரி விற்பின்
போக,முனி சிந்தைதொட
 ரக்,கடிது போனான்.

[ஏகி—போய். அவ்வயின்—அவ்விடத்தில். உறைமின்—வசியுங்கள். மேகநிற வண்ணன்—ராமன். பாகு அனைய சொல்லி—வெல்லப்பாகு போன்ற இனிமையான சொல்லையுடைய சீதை. பரிவின்—அன்போடு. கடிது—விரைவாக.]

இத்தகைய தமிழின்பத்தால் கொஞ்சி வசீகரிக்கப் பெறும் வாசகர் - சிந்தையும் ராமன் முதலானவர்களைப் பின்தொடர விரைகின் றதல்லவா?



பி. ஸ்ரீ.

227. கழுகின் வேந்து

அகஸ்திய ஆசிரமத்திலிருந்து பல காதம் நடந்தார்கள், ராமன் முதலிய மூவரும். கிடந்த நதிகளையும் கண்டார்கள். நின்ற நதிகளையும் கண்டார்கள் — ஆம், பெரிய மலையருவிகளைத் தான் ‘நின்ற நதிகள்’ என்கிறான் கவிஞன், குழந்தை பார்ப்பது போல் பார்த்து. சீதைக்கு அப்படி அதிசயமாக அக்காட்சிகளைக் காட்டிக்கொண்டு போனான் ராமன் என்பது குறிப்பு.

மலைகளைப் பார்த்தார்கள். தொடர்ந்த மலைகள் — நட்புக் கொண்டு கைகோத்து நிற்பதுபோல் ஒன்றையொன்று தொடர்ந்துள்ள மலைகள். நெருங்கியுள்ள குன்றுகள் — ஆம், அவ்வளவு நெருக்கமான நட்புக் காதல். அத்தகைய சூழல்களோடு கூடிய காட்டிடங்களைக் கடந்தார்கள்.

ஜடாயு தரிசனம்

இவற்றை யெல்லாம் கண்டு, கடந்து சென்றதும், பார்க்கிறார்களாம் ஒரு மலையுச்சியில் அதிசயமாக :

நடந்தனர் காவதம்
    பலவும்: நன்னதி
கிடந்தன, நின்றன,
    கிரிகள் கேண்மையின்
தொடர்ந்தன, துவன்றின,—
    சூழல் யாவையும்
கடந்தனர், கண்டனர்
    கழுகின் வேந்தையே.

[காவதம் — காதம். நன்னதி — அழகிய ஆறுகள். கேண்மை — நட்பு. துவன்றின — நெருங்கியவை. சூழல் — சூழ்ந்த காட்டிடங்கள். வேந்து — வேந்தன்.]

முதல் முதல் உருக்கிய பொன்போல் ஒரு தோற்றம். பிறகு 'உதய சூரியன்தானோ?' என்ற திகைப்பு. அப்பால் 'இல்லை, கழுகு தான்; அந்த விரிந்த சிறகுகளே பரந்த இளங்கதிர்கள் போலத் தோன்றின!' என்று தெளிவு. கண்டார்களாம்:

உருக்கிய சுவணம் ஒத்(து),
உதயத்(து) உச்சிசேர்
அருக்கன், இவ் அகலிடத்(து)
அலங்கு திக்கெலாம்
தெரிப்புறு செறிசுடர்ச்
சிகையி னுல், சிறை
விரிந்திருந் தனன்என,
விளங்கு வான்தனை.

[சுவணம் — பொன். உதயத்து — உதய கிரியின். அருக்கன் — (இங்கே) இளஞ்சூரியன். அகலிடத்து — அகன்ற பூமியில். அலங்கு — பொருந்திய. தெரிப்புறு — விளங்கச் செய்கிற. செறி சுடர்ச் சிகையினுல் — நெருங்கிய கிரணங்களின் ஒளியினுல். சிறை — சிறகுகள்.]

கழுகுக் கண்ணும் அறிவுக் கண்ணும்

சிறகை விரித்துக் கொண்டு இளஞ் சூரியனைப் போலக் காண்கிறது ஜடாயு என்ற கழுகுக்கு அரசு. இக்கழுகின் பொன் மேனியில் சிவந்த கால்கள் பொன்னுடன் பொருந்திய பவழக்கொடிபோல் திகழ்கின்றன. இவ்வளவுக்கும் மேலாக ஒரு சிறப்பியல்பு — கழுகினத்திற்கு உரியது. அதாவது,



சேய்மையின்
நோக்குறு
சிறுக
ணுன்தனை

[சேய்மையின் — மிக்க தூரத்தையும். நோக்குறு — நோக்குகின்ற. சிறுகணுன் — சிறிய கண்களை உடையவன்.]

என்று அந்தக் கழுகுக் கண்களையே காட்டி விடுகிறுன் கவிஞன்.

கழுகின் சிறு கண்கள் மிக்க தூரத்திலுள்ள பொருள்களையும் நோக்கும் ஆற்றல் பெற்றிருக்கின்றன அல்லவா? ஜடாயுவின் இத்தகைய கண்களுக்குக் கவிஞன் நுண்ணறிவாளனுடைய 'தூரதிருஷ்டி' வாய்ந்த அறிவுக் கண்ணை உபமானமாக்குகிறான் :

தூய்மையன், இருங்கலை
துணிந்த கேள்வியன்,
வாய்மையன், மறுவிலன்,
மதியின் கூர்மையன்,
ஆய்மையின் மந்திரத்(து)
அறிஞ னும்எனச்,
சேய்மையின் நோக்குறு
சிறுக ணான்தனை.

[இருங்கலை — பெரிய கலைகள். வாய்மை — உண்மை. மறு இலன் — மாசு மறு இல்லாதவன். ஆய்மையின் — ஆராய்ச்சியுடைய. மந்திரத்து — ஆலோசனைகளால்.]

நுண்ணறிவாளன் காலத்திலும் தூரத்தைப் பார்த்து விடுகிறானும்; இடத்திலும் தூரத்தை அறிந்து கொள்கிறானும். ஆனால் எப்பேர்ப்பட்ட நுண்ணறிவாளன்! அவனுக்கு அறிவுக் கூர்மையுடன் ஆராய்ச்சி யறிவும் ஆலோசனை யறிவும் பொருந்தி யிருக்க வேண்டுமாம் — அதாவது, ஆராய்ந்து ஆலோசிக்கும் திறமையால் அவன் தூரத்தையும் சமீபத்திலே காண்கிறான். இத்தகைய அறிஞன்தன் அறிவைப் பெரிய கலைகளாலும் கேள்விகளாலும் தீட்டிக் கூர்மை செய்திருக்க வேண்டுமாம்.

அறிவுக்கூர்மையும் போதாது; தூய்மையும் வாய்மையும், மன மாசுகளைத் துடைத்து மனக் கண்ணாடியைத் தெளிவுபடுத்திவைத்திருக்கும் ஆற்றலும், அறிவுக்கு அரண் செய்ய வேண்டுமாம். அத்தகைய அறிவுக் கண்தான் காலதேச வலைகளைக் கடந்து சேய்



மையில் நோக்கும் பேராற்றல் வாய்ந்தது என்கிறான் கவிஞன். இத்தகைய அறிவுக் கண்ணை ஜடாயுவின் கழுகுச் சிறு கண்ணுக்கு உபமான மாக்குவது பின்னால் வரும் ஜடாயுவின் குணாதிசயத்திற்கு ஒரு தோற்றுவாயாகக் கருதத் தக்கது.

பரஸ்பர சந்தேகம்

கழுகுக் கண்ணை வருணித்த பின் கழுகின் மூக்கையும் வருணிக்கிறான். யானையின் தீட்டித் தேய்ந்து ஒளிரும் அங்குசம்போ லிருக்கிறதாம் மூக்கு. பிறகு கழுகின் நீண்ட ஆயுளையும் குறிப்பிடுகிறான். அத்தகைய கழுகுக்கு அரசை முடியும் ஆரமுமாய்க் கண்டதும், ராம லட்சுமணருக்கு அதிசயம் மட்டுமல்ல, சந்தேகமும் ஏற்படுகிறது.

வீங்கிய வலியினில்
இருந்த வீரனை,
ஆங்(கு)அவர் அணுகினர்
அயிர்க்கும் சிந்தையார்.

[வீங்கிய வலியினில் – மிக்க வலிமையுடன். வீரனை – வீர ஜடாயுவை. ஆங்கு–அவ்விடத்தில். அணுகினர்–சமீபித்து. அயிர்க்கும்–சந்தேகிக்கிற.]

அரக்கர்களைக் குறித்து அகஸ்திய ஆசிரமத்திலும் தண்டகவனத்திலும் கேள்விப் பட்டிருக்கிறார்கள் அல்லவா? 'யாரோ ஓர் அரக்கன் தான் இப்படிக் கழுகுருவம் பூண்டு நம்மைத் தின்ன வந்து விட்டானோ?' என்று கூடச் சந்தேகிக்கத் தொடங்கினார்கள்.

கழுகுக் கண்ணல்லவா? ஜடாயுவும் இவர்களைப் பார்த்துவிட்டான்; இவர்கள் தன்னைப் பார்ப்பதற்கு முன்பே பார்த்துவிட்டான். அவனுக்கும் சந்தேகம் தான், அதிசயம் தான்! ஆனால் இவர்களைப் போல் இவ்வளவு அநியாயமாக அவன் சந்தேகிக்க வில்லை.

முதுமை யறிவு?

இவர்களுடைய சடை முடியைப் பார்த்தான். 'தவசிகளோ என்றால் வில் இருக்கிறதே!' என்று சந்தேகித்தான். காலில் வீரக் கழல் கண்டான். வலிமை வாய்ந்த உடல் வளத்தையும் கண்டான். ஒளியையும் அழகையும் பார்த்தான். 'தேவர்களோ' என்று பிரமித்துப் போகிறான்:

வனைகழல் வரிசிலை
மதுகை மைந்தரை,
அனையவன் தானும்கண்(டு),
அயிர்த்து நோக்கினான்:
'வினையறு நோன்பினர்
அல்லர், வில்லினர்,
புனைசடை முடியினர்,
புலவ ரோ?' என.

[வனைகழல் — (காலில்) கட்டிய வீரக் கழல். வரிசிலை — கட்டமைந்த வில். மதுகை — வலிமை. அனையவன் — அந்த ஜடாயு. வினை அறு நோன்பினர் — நல்வினை தீவினை யென்ற இரு வினையும் அறுத்துத் தவம் புரியும் முனிவர்கள். புனைசடை — தரித்த சடை. புலவர் — (இங்கே) தேவர்கள்.]

'தோற்றத்திலும் வேடத்திலும் என்ன முரண்பாடு!' என்று அதிசயித்தபோதிலும், இவர்களைத் 'தேவர்களோ?' என்று தான் ஜடாயு சந்தேகித்தான். இவர்களோ அவனை 'மாறு வேடம் பூண்ட அரக்கனோ?' என்று கூடச் சந்தேகித்து விட்டார்களல்லவா? முதுமை யறிவுக்கும் இளமை யறிவுக்குமுள்ள வேறுபாடுதானோ?

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

228. ஜடாயு - ராமர் சந்திப்பு

சீதா ராம லட்சுமணர் காட்டு வழியில் வந்து கொண்டிருக்கும் போதே ஒரு குன்றின்மேல் சூரியோதயம் ஆவது போன்ற ஒரு காட்சியை முதன் முதல் கண்ணுற்றார்கள். அதிசயத்துடன் வந்துகொண்டேயிருக்க, அச்சூரிய கிரணங்கள் திரண்டு இரு பெருஞ் சிறகுகளாய்க் காண்கின்றன. மேலும் மேலும் இவர்கள் வந்து கொண்டேயிருக்க, தாங்கள் முதன் முதல் கண்ட உதய சூரியன் ஒரு பறவையாகக் காண்கிறது. அப்படித் தோற்றமளிக்கிறது குன்றின்மீது, பென்னம் பெரிய பொன்னிற மேனியோடு கூடிய கழுகரசு. அக் கழுகை 'உருமாறிய ஓர் அரக்கனோ?' என்று ஐயுற்றுச் சினங் கொண்டு கூர்ந்து நோக்குகின்றார் ராம லட்சுமணர். 'தேவரோ, யாவரோ, மூவருள் இருவரோ?' என்று ஜடாயுவும் இவர்களை ஐயுற்று நோக்குகின்றான்.

அழகை எடை போடுகிறானா?

கழுகைக் கூர்ந்து நோக்க நோக்க, ராம லட்சுமணரின் மன்மதப் பேரழகு வசீகரித்து விடுகிறது. ஆனால் ஜடாயு மன்மதனையும் பார்த்திருக்கிறான். உரு இழந்த காமனை எப்படிக் கண்டிருக்க முடியும்? அம் மன்மதன் ஈசன் கண்ணால் எரிந்து உரு இழக்கு முன் கண்ணால் கண்டிருக்கிறானாம், யுகங்கண்ட இப்பழையோன். அம்மன்மத அழகையும் இம்மன்மத புருஷரின் எழிலையும் எடைபோட்டுப் பார்க்கிறது ஜடாயுவின் உள்ளம்.

பார்த்து, எப்படி முடிவு கட்டுகிறது பாருங்கள்:

காமன்என் பவனையும்
கண்ணின் நோக்கினேன்;
தாமரைச் செங்கண்இந்
நடக்கை வீரர்கள்
பூமரு பொலங்கழல்-
பொடியி னோடும்ஒப்-
பாம்என அறிகிலேன்;
ஆர்கொ லாம்இவர்?

[செங்கண் — செம்மையான கண்கள். தடக்கை — பெரிய கைகள். பூமரு பொலங்கழல் — தாமரைப் பூவைப் போன்ற அழகிய பாதங்கள். பொடி — தூள். ஒப்பாம் என அறிகிலென் — ஒப்பாக மாட்டான் என்று அறிவேன். ஆர்கொலாம் — யாவரோ?]

ஆண்மை யழகும் பெண்மை யழகும்

'அழகில் மன்மதன் இவர்கள் பாததூளுக்கும் ஒப்பாக மாட்டான்!' என்று தீர்மானித்த ஜடாயு, இப்போது மறுபடியும் நோக்கி, அருகேயுள்ள சீதையையும் கவனிக்கிறான். கவனித்தும், அவர்களை 'யாரா யிருக்கலாம்?' என்று ஊகஞ் செய்ய இயலவில்லை. அப்படி வந்து அழகு மோதுறத ஜடாயுவின் கண்ணிலும் கருத்திலும்:

'உலகொரு மூன்றும்தம்
உடைமை ஆக்குறும்
அலகறும் இலக்கணம்
அமைந்த மெய்யினர்,
மலர்மகட்(கு) உவமையா-
ளோடும் வந்தஇச்
சிலைவலி வீரரைத்
தெரிகி லேன்'என—

[ஆக்குறும் — ஆக்கவல்ல. அலகறும் — அளவற்ற. இலக்கணம் — லட்சணம்; (இங்கே) உத்தம புருஷ லட்சணங்கள். மெய்—மேனி. மலர் மகள் — திருமகள். சிலை — வில். வலி — வலிமை. என — என்று கருதி.]

இந்தப் புருஷ லட்சணங்களைப் பார்த்ததும் 'உடனே உலகம் மூன்றையும் இவர்களுக்கே உடைமையாக உரிமைப் பத்திரம் பதிவு செய்து கொடுக்கலாம்!' என்று தோன்றுகிறது ஜடாயுவுக்கு. சீதாலட்சுமியின் அழகோ அந்த வில்வீரத்திற்கு அருகே நின்று அந்த ஆண்மை யழகையும் மறைத்து விடுகிறதாம்.

ஜடாயுவின் ஊகம்

'எல்லாப் பெண்களுக்கும் மகாலட்சுமியை உபமானமாகச் சொல்லுகிறார்கள். அந்த மகாலட்சுமிக்கும் ஓர் உபமானம் வேண்டுமென்றால், இவளைத்தான் சொல்ல வேண்டி யிருக்கும்! திருமகளினும் சிறந்த இம் மகள் யாரோ?' என்றெல்லாம் ஆலோசனையில் மூழ்கிய ஜடாயுவின் உள் மனத்திலிருந்து மின்வெட்டுவது போல் ஓர் ஊகம் தோன்றுகிறது:

கருமலை செம்மலை
அனைய காட்சியர்,
திருமகிழ் மார்பினர்,
செங்கண் வீரர்நாம்,
அருமைசெய் குணத்தின்என்
துணைவன் ஆழியான்
ஒருவனை இருவரும்
ஒத்து ளாரரோ!

[அனைய — போன்ற. திருமகிழ் — விஜயலட்சுமி மகிழ்ந்து வீற்றிருக்கின்ற. அருமைசெய் குணத்தின் — பெறுதற்கு அரிய பெருங்குணங்களை யுடைய. துணைவன் — நண்பன். ஆழியான் — சக்கிரவர்த்தி; (இங்கே) தசரத சக்கிரவர்த்தி.]





கருங்குன்றமும் செங்குன்றமும் ஒருங்கு விளங்குதல் போல் அவ்வளவு கம்பீரமாக நிற்கிறார்களாம் ராம லட்சுமணர்கள். அந்த நிற வேற்றுமைக் கிடையே உரு வொற்றுமை—இதைக் கவனித்து விடுகிறது கழுகுக் கண். இவர்களது முக ஜாடையில் தன் ஆருயிர் நண்பரான தசரத சக்கிரவர்த்தியைப் பார்த்து விடுகிறான் ஜடாயு. ‘தசரத ராஜகுமாரர் போலும்’ என்று ஒருவாறு ஊகித்த ஜடாயுவுக்கு இன்னும் நிச்சய புத்தி ஏற்படவில்லை.

பொய் சொல்லத் தெரியாது

இவர்களோ இன்னும் கோபமாகவே இருக்கிறார்கள்; ‘பிணந்தின்னும் ஒரு ராட்சஸக் கழுகு — இப்படி ஒரு ராட்சஸன்தான்!’ என்று இன்னும் நினைப்பு. ஆனால் ஜடாயுவுக்கோ இன்னும் ஐயம் தீரவில்லை யென்றாலும், முகத்தைப் பார்க்கப் பார்க்க இவர்கள் மீது அன்பு பெருகுகிறது. இந்நிலையில் அவன் இவர்களை நோக்கி, ‘நீங்கள் யார்?’ என்று கேட்டு விடுகிறான்.

கழுகு மனித பாஷையில் பேசியதும் ஐயம் தீர்ந்திருக்க முடியுமா? அதிசயித்துத்தான் இருக்க வேண்டும். எனினும், இவர்கள் உண்மையே

சொல்லுகிறார்கள, தம்மைத் தெரிவிக்கும்போது. தசரத ராஜ குமாரர்க ளல்லவா? பொய் சொல்லலாமா? சொல்ல முடியுமா? பொய் சொல் லத்தான் தெரியுமா?

வினவிய காலையின்,
மெய்ம்மை அல்லது
புனைமலர்த் தாரவர்
புகல்கி லாமையால்,
'கனைகடல் நெடுநிலம்
காவல் ஆழியான்
வனைகழல் தயரதன்
மைந்தர் யாம்' என்றார்.

[வினவிய காலையின் — வினவிய பொழுது. புனைமலர்த் தாரவர் — சூடிய பூமாலையை யுடைய அவர்கள். புகல்கிலாமையால் — சொல்ல அறி யாததால். கனைகடல் நெடு நிலம் — ஒலிக்கும் கடல் தழுவிய பெரிய ராஜ்யம். காவல் ஆழியான் — காவல் செய்யும் ஆக்ஞா சக்கிரத்தை யுடைய சக்கிரவர்த்தி. வனை கழல் — தரித்த வீரக்கழல்.]

உண்மை யல்லாததைச் சொல்லவே தெரியாதாம் இவ்வுத்தம ராஜ குமாரர்களுக்கு. ஆகவே, இவர்கள் ஜடாயுவை 'எதிரியோ? பொய் வினை யரக்கனோ?' என்று சந்தேகித்த போதிலும் மெய்ம்மையே சொல்லி விட்டார்கள்.

க்ஷேமமா?

சந்தேகம் உறுதிப் பட்டதும் ஜடாயுவுக்கு ஒரே ஆனந்தம். தான் இருந்த குன்றின் மேட்டிலிருந்து ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து வந்து அந்தப் பிள்ளைகளைக் கட்டித் தழுவிக் கொள்ள வேண்டும் என்ற ஆசை பிறந்து விட்டது ஜடாயுவின் இதயத்திலே. உடனே இறங்கி வந்து தன் தோழரான சக்கிரவர்த்தியின் க்ஷேமம் வினவுகிறான்:

உரைத்தலும், பொங்கிய
உவகை வேலையன்,
தரைத்தலை இழிந்(து),அவர்த்
தழுவு காதலன்,
'விரைத்தடந் தாரினிர்!'
வேந்தர் வேந்தன்தன்
வரைத்தடந் தோளிணை
வலிய வோ?' என்றான்.

[உவகை வேலையன் — களிப்பாகிய கடலையுடையவனாய். தரைத் தலை — (சீதா ராம லட்சுமணர் நின்ற) தரையில். இழிந்து — இறங்கி வந்து. அவர்த்தழுவு காதலன் — அவர்களைத் தழுவுகின்ற காதலை உடை யவனாகி. விரைத் தடந்தாரினிர் — வாசனையுள்ள பெரிய பூமாலை யுடைய வர்களே. வரைத்தடந் தோளிணை — மலைபோன்ற விசாலமான இரண்டு தோள்களும். வலியவோ — வலிமை யுள்ளனவாய் இருக்கின்றனவா?]

'தோளிணை வலியவோ?' என்று வீரன் வீரனை க்ஷேமம் விசாரிக்கும் முறையில் ஜடாயு வினவுகிறான். அதற்கு ராமன், 'மறந்தும் பொய் கூறாத மன்னவன் உண்மை காக்க உயிர் கொடுத்துச் சுவர்க்கம் புகுந் தான்!' என்று பதில் சொல்லுகிறான்.

'அந்தோ! அந்த மரணம் இக் கழுகரசுக்கும் வந்து விட்டதோ?' என்று சீதா ராம லட்சுமணர் திடுக்கிடும்படி மூர்ச்சித்து விடுகிறான் ஜடாயு.



பி. ஸ்ரீ.

229. ஜடாயு புலம்பல்

தசரத சக்கிரவர்த்தியின் பெயரைக் கேட்டதும் ஜடாயு மேட்டிலிருந்து இறங்கி வந்து, ‘அவர் தைரியமாய் இருக்கிறாரா?’ என்று க்ஷேமம் வினவிய போதே, அந்த முகம் இவர்களை அறியாமலே இவர்கள் உள்ளத்தில் ஒருவகை நல்லுணர்ச்சியைத் தோற்றுவித்திருக்க வேண்டும். எனினும் அந்த நல்லுணர்ச்சிக்கு, ராமலட்சுமணர்களின் ராட்சஸ வெறுப்பால் தோன்றியிருந்த ஐயத்துடன் போராடச் சக்தியில்லை. ஆனால் ‘தசரதர் இறந்தார்’ என்றதும் ஜடாயு மூர்ச்சித்து விழுந்தானே, அந்தப் பெருஞ் சோகம் ராம லட்சுமணர்களை உருக்கிவிட்டது.

உணர்வு தோன்ற, உள்ளம் அழிய

இவர்கள் அவனைக் கைகளால் தழுவி யெடுத்தார்கள். தழுவி யெடுக்கும் போதே இவர்களுக்குக் கண்ணீர் வந்துவிட்டது, நிறைய வந்து விட்டது. ஜடாயுவுக்கும் மூர்ச்சை தெளிந்தது. அந்தக் கண்ணீரே தண்ணீர்போல மூர்ச்சை தெளிவித்த தென்கிறான் கவிஞன். ‘சோகத்தில் தோழமை’ என்றால் சாமானியமா? உறங்கியவன் விழித்துக் கொண்டது போல் உணர்வு மீண்டெழுந்தது.

துன்பத்தில் அழுந்திக் கிடந்த ஜடாயு, உள்ளம் குழைந்து அழியப் புலம்பினான் :

பரவலருங் கொடைக்கும்,நின்தன் பனிக்குடைக்கும்,
　　பொறைக்கும்,நெடும் பண்பு தோற்ற
கரவலருங் கற்பகமும், உடுபதியும்,
　　கடலிடமும் களித்து வாழப்,
புரவலர்நம் புரவலனோ? பொய்ப்பகையே!
　　மெய்க்கனியே! புகழின் வாழ்வே!
இரவலரும் நல்லறமும் யானும்இனி
　　என்படநீத்(து) ஏகி னையே!

[பரவல் அருங் கொடை — புகழ்தற்கு அரிய சிறந்த வண்மைக்குணம். பனிக்குடை — குளிர்ச்சியான கொற்றவெண்குடை. நெடும் பண்பு தோற்ற — பண்பில் அல்லது குணத்தில் மிகுதியாகத் தோல்வியடைந்த. கரவல் அருங் கற்பகம் — ஒளித்தலுக்கு மாறான (அதாவது ஒளியாது கொடுக்கும்) அரிய இயற்கையுள்ள கற்பகத்தரு. உடுபதி — நட்சத்திரங்களுக்கு நாயகனான சந்திரன். கடலிடம் — கடல் சூழ்ந்த இடமாகிய பூமி. புரவலர் — அரசர். மெய்க்கு அணியே — சத்தியத்திற்கு ஆபரணமே. இரவலர் — யாசகர். என்பட — எத்தன்மையடைய; எவ்வளவு பெரிய துன்பத்தை அடைய. நீத்து — துறந்து.]

கொடையும் குடையும்

'தசரதருடைய கொடையும் குடையும் (அரசியலும்) பொறுமையும் ஒப்பற்றவையல்லவா?' என்ற நினைவு முதன்முதல் வருகிறது ஜடாயுவுக்கு. வேண்டுவார் வேண்டியதை யெல்லாம் வாரி வழங்கிக் கொண்டே இருப்பாராம், தமக்கென்று ஒன்றும் வைத்துக்கொள்ளாமலே. 'எந்தக் கற்பகம் தான் அப்படி இரங்கி மனமகிழ்ச்சியுடன் கொடுக்கமுடியும்?' என்று அதிசயித்த ஜடாயு, வண்மை என்ற அந்தப் பண்பிற்குக் கற்பகமும் தோற்றுப் போய்விட்டது என்று நினைக்கிறான்.



பிறகு சக்கிரவர்த்தியின் அரசியல் மாட்சி நினைவுக்கு வருகிறது. பிறருக்குப் பொருளை வழங்கினாரென்றால், அரசாட்சி என்ற அப்பெரும் பணிக்குத் தம்மையே வழங்கிவிட்டாராம், உரிமையாக்கிவிட்டாராம். நல்ல அரசாட்சிக்குக் கொற்ற வெண்குடை ஓர் அறிகுறி. நீதியும் அருளும் கலந்து அமைந்த நல்லரசைக் குறிக்கும் போது, 'இந்தக் கொற்ற வெண்குடை - சந்திரவட்டக்

குடை — சந்திரன்போல் குளிர்ந்த தண்ணளி பொழிகிறது !' என்பர். ஜடாயுவோ 'தசரதரின் சந்திர வட்டக்குடைக்கு, தண்ணொளியிலும் தண்ணளியிலும் சந்திரனும் தோற்றுப் போய்விட்டது !'. என்று கருதுகிறான்.

விசேஷ அருங்குணம்

இப்படி வண்மையையும் அரசியலையும் நினைத்துக் கொண்டு தசரதரை 'மனிதராகவும் சக்கிரவர்த்தியாகவும் எவ்வளவு பெரியவர் !' என்று அதிசயிக்கும் ஜடாயு, அவரை அப்படி உயர்ந்த மனிதராகவும் அரசராகவும் செய்துவிட்ட ஒரு விசேஷ அருங் குணத்தையும் நினைத்துப் பார்க்கிறான். அதுதான் பொறுமை என்ற பெருங் குணம். பொறுமையை விஞ்ஞான ஆராய்ச்சியாளர்களின் அரும்பெருங் குணம் என்பர். அரசியல் — தலைவருக்கும் அத்தகைய அரும்பெருங் குணம் இன்றியமையாதது. பொறுமையில், பூமிபோலிருக்க வேண்டுமாம் பூமியில் ஆட்சி செலுத்துவோர் ! இங்கே ஜடாயுவோ 'பொறுமையில் பூமிதேவியையும் வென்று விட்டார் தசரத சக்கிரவர்த்தி !' என்று நினைக்கிறான். அத்தகைய குணாதிசயம் வெளிப்பட்ட அருஞ்செயல்கள் அகக் கண்முன் ஓடிவந்தன.

தசரதர் இறந்ததனால், 'இனிமேல் கொடைக்குக் கற்பகம் தான் ; குளிர்ச்சிக்குச் சந்திரன் தான்; பொறுமைக்குப் பூமிதான் !' என்பார்களாம். போட்டி போய் விட்டதால், தங்களுடன் போட்டி போட்டுப் பணி புரிந்து வாழ்ந்த சக்கிரவர்த்தி போய் விட்டதால், கற்பகமும் சந்திரனும் கடலிடமும் இனிமேல் களித்து வாழும் !—என்று கூறுவது, நண்பர் இறந்ததால் ஜடாயுவுக்கு ஏற்பட்ட வயிற்றெரிச்சலைக் காட்டுகிறது.

தசரதமரணம் இரவலருக்கு நஷ்டமானது போல் நல்லறத்திற்கும் தனக்கும் ஈடு செய்ய முடியாத நஷ்டம் என்கிறான் ஜடாயு. தசரதரின் கொடையை நோக்கியிருந்த யாசகர் போல், தருமமும் அவர் குடையை நோக்கி வந்து அந்த நிழலிலே இனிது தங்கி அதரும வெப்பத்திற்கு உள்ளாகாமல் எக்களிப்புடன் வாழ்ந்து கொண்டிருந்ததாம். அப்படியே தனக்கும் அந்த ஒப்பற்ற பெரும் பொறுமையில் நண்பனாகத் தங்க இடம் கிடைத்திருந்தது என்று, அந்த இனிய காலத்தை நினைப்பூட்டிக் கொள்கிறான். 'ஒருவர் பொறுமை இருவர் நட்பு' என்று சொல்வதுண்டு : 'தசரதருடைய பொறுமையால் அந்த நட்பு நிலைபெற்றிருந்தது' என்று அந்த நண்பருடைய தனிப் பெருங்குணத்தைப் பாராட்டுகிறான் ஜடாயு.

என்ன குணாதிசயம் !

'இனி நாங்கள் (இரவலரும் நல்லறமும் நானும்) எக்கேடு கெட்டுப் போனால் என்ன? — என்று தானே எங்களைத் துறந்து போய் விட்டாய் !' என்ற புலம்பலில் நட்புக்காதல் எவ்வளவு அருமையாக வெளிப்படுகிறது !

தசரத சக்கிரவர்த்தியை ஜடாயு,

புரவலர்தம் புரவலனே ! பொய்ப்பகையே !
மெய்க்கனியே ! புகழின் வாழ்வே !

என்று குறிப்பிடுவதைத்தான் பாருங்கள். 'பொய்ப்பகையே !' என்றதும் போதாதென்று 'மெய்க்கனியே !' என்றும் போற்றுகிறான். சக்கிரவர்த்தியோடு நெடுங்காலம் நெருங்கிப் பழகிய நண்பன் ஜடாயு என்று கருதலாம்.

அக்காலம் முழுவதும் தன் பிழைகளை யெல்லாம் நட்புக் காதலுடன் பொறுத்து நட்புக்கு அணியாக விளங்கியது போல், சக்கிரவர்த்தி சத்தியத்தின் மீதும் அத்தகைய நெருங்கிய நட்புக் காதலுடன் பழகி அதற்கும் அணியாக அமைந்து, பொய்யை அறவே வெறுத்து வந்தார் என்பது குறிப்பு.

'பொய்க்கணியே! மெய்ப்பகையே! பொருளின் வாழ்வே!' என்று புகழும்படி நவ நாகரிகம் போய்க் கொண்டிருக்கும் வேகத்திலே, ஜடாயு பாராட்டும் குணாதிசயம் எத்தகைய குறிக்கோளை நம் அகக் கண்முன் கொண்டு நிறுத்துகிறது! இப்பாட்டிலே,

> இரவலரும் நல்லறமும் யானும்இனி
> என்படநீத்(து) ஏகி னையே!

என்ற இறுதி யடிதான் எவ்வளவு நயம் மிக்க கவிதை! மற்ற அடியிலுள்ள பொருள்களுக் கெல்லாம் முடியாக — ஒரு மணி முடிபோல் — அமைந்திருக்கிறது இந்த அடி.

தசரத சக்கிரவர்த்தி கொலு வீற்றிருந்த அந்த அரசியல்-மாட்சியையும், தன்னையும் நண்பனாக அணைத்துக் கொண்ட அந்த அன்பின் மாட்சியையும் ஜடாயுவால் எப்படி மறக்க முடியும்? 'ஆட்சி யென்றால் தசரதர் ஆட்சி தான்; மாட்சி யென்றால் அந்த மாட்சிதான்; நட்பு என்றால் அந்த நட்புத்தான்!' என்ற இதயம் நிரம்பிய எண்ணம் சோகத்தை மேலும் மேலும் அதிகப்படுத்துகிறது.

காவலின் அழகு


கிரீடமும், கிரீடத்திற்கு மேலே விளங்கிய சந்திர வட்டக் குடையும் தசரதர் ஒருவருக்கே பொருத்தமாகவும் அழகாகவும் இருந்தன என்பது இந்த நண்பனின் எண்ணம் — அப்படியே உலகமும் சொல்லிக் கொண்டதாம். தசரதர் அதைக் காவல்–தொழிலாகவும், தம்மை மக்களின் காவற்காரனாகவும் கருதினர். உலகமோ அமுதம் போன்ற அந்தப் பாதுகாவல்-தொழில் செய்த தொழிலாளியே, பணியாளரே 'உலகநாயகன்' என்று போற்றியதாம். 'அத்தகைய பெரும் பணியையும் பொருட்படுத்தாமல் போய்விட்டாரே தசரதர்! காரணம் என்ன? அந்தத் தனிப்பெரும் பொறுப்பை இப்படித் தட்டிக் கழித்து விடலாமா?' என்று நினைத்துப் பார்க்கிறான் ஜடாயு.

> அலங்காரம் எனஉலகுக்(கு) அமுதளிக்கும்
> தனிக்குடையாய்! ஆழி சூழ்ந்த
> நிலங்காவல் அதுகிடக்க,

[அலங்காரம் – அழகு செய்வது. தனிக்குடை – ஒப்பற்ற கொற்ற வெண்குடை. ஆழி – கடல்.]

அப்படியே போய்விட்டாராம்.

தோற்றத்தில் தசரதர் முடிமீது அலங்காரமாய் விளங்கிய தனிக்குடை, தொழிலால் உலகத்திற்கு அமுதமாக அரசியல் - காவல் - பணியை ஆற்றி வந்ததாம். 'அந்தக் காவலை விட்டுக் காவலாளி ஓடுவது என்ன நியாயம்?' என்று வருந்திய நெஞ்சில் - நேய நெஞ்சில் - திடீரென்று ஒரு காரணம் புலனாகி விட்டது. அது என்ன? அடுத்த வாரம் பார்க்கலாமே!



பி. ஸ்ரீ.

230. சோக நெருப்பில் ஜடாயு

வள்ளல்களை மூன்று வகையாகப் பிரித்துப் பேசுவதுண்டு. 'பாத்திர மறிந்து பிச்சையிடு' என்கிறார்களே, அப்படி அறிந்து அளந்து ஜாக்கிரதையாகப் பிச்சையிடும் அறிவாளியை உத்தம வள்ளல் என்று லட்சியத் தமிழர்கள் ஒப்புக்கொண்டதில்லை. வந்தவனின் குறிப்பறிந்து அவன் கேட்கு முன்பே பாத்திர மறிந்து பிச்சையிட்டாலும் உத்தம வள்ளல் இல்லையாம். இவனை மத்திம வள்ளல் என்று சொல்லிக் கொள்ளலாம். கேட்ட பின்பு கொடுப்பவன் கடைசித் தரம். எவருக்கு எது தேவையோ அதை அறிந்து கொள்வதோடு. தேவையுள்ளவர் இருக்குமிடம் தெரிந்து தேடிப் பிடித்து அவர்கள் வேண்டியதை யெல்லாம் வேண்டியபடியே, 'என்ன பேறு பெற்றோம்!' என்று அகமகிழ்ந்த முகமலர்ந்து கைம்மாறு கருதாமல், தனக்கென்று கையிருப்பாக ஒன்றுமே வைத்துக் கொள்ளாமல், உடல் பொருள் ஆவியையும் வழங்குகிறவனே உத்தம வள்ளல்.

மூன்று வித நட்பு

இப்படி வள்ளன்மையை மூன்று பிரிவுகளாய்ப் பேசுவது போல் நட்பையும் தரப்படுத்திப் பேசுவதுண்டு. 'நண்பனுக்காக எப்படி யெல்லாம் வருந்துகிறான்! எவ்வளவு தியாகம் செய்யவும் தயார்! அவன் இறந்தானென்று இவன் எப்படி யெல்லாம் புலம்பிக் கொண்டிருக்கிறான்!' என்றெல்லாம் சொல்லுகிறோமே, இத்தகைய நட்பையும் உத்தம நட்பு என்று ஒப்புக்கொள்ள முடியாதாம். நண்பன் இறந்தது கண்டதும், அல்லது கேட்டதும், உடனே அந்த நட்புக் காதலால் ஒருவன் தானும் இறந்து போகக் கூடும் இத்தகைய நண்பர்களை இந்நாளில் — இந்த வியாபார, யந்திர நாகரிகத்தில் — பார்ப்பது அரிது. இத்தகைய நண்பரையும் உத்தம நண்பரென்று ஒப்பக் கொள்ளாமல், மத்திம நண்பரென்றுதான் தமிழகத்தின் லட்சியம் கருதியது. 'உடல் இரண்டு; உயிர் ஒன்றே!' என்ற காதல்-வாழ்வே நட்புக் காதலுக்கும் உரியதென்று கருதியது தமிழகம். எனவே,


நண்பர் இருவருள் ஒருவர் இறந்தால் மற்றொருவர், அது அறியாமல் தொலைவில் இருந்தபோதிலும் அப்பொழுதே இறந்து போவாராம்: இதுவே உத்தம நட்பு என்றது தமிழகம்.

ஜடாயுவின் நட்புக் காதல்

'இத்தகைய உத்தம நட்பு வாய்க்கப் பெற்றேனில்லையே!' என்று வருந்துகிறான் ஜடாயு. தசரதர் உயிர் நீங்கிய அப்பொழுதே தனக்கும் உயிர் நீங்க வில்லையே என்று வருந்திய ஜடாயு, 'அப்படி இறக்க வில்லையாயினும் தசரதர் இறந்த செய்தி கேட்டவுடனேயாவது செத்துப் போனேனா? அதுவும் இல்லையே! செய்தி கேட்டுச் சிறிது பொழுது கழிந்தும் உயிர் ஒழிந்த பாடில்லையே!' என்று புலம்புகிறான்.

இம் மன நிலையில் — இம் மரண வேதனையில் வெறியில், 'என்னுடைய நிலையைச் சோதித்துப் பார்க்கவேதானே, தசரதர் போட்டது போட்டபடி, இராஜ்ய காரியங்களையும் லட்சியம் செய்யாமல் போய்விட்டார்?' என்றுகூட நினைத்து ஏங்கிப் போகிறான். 'நாட்டுக்காவல் என்ற அந்தப் பெரும் பணியையும் பொருட்படுத்தாமல்,





"நான் இறந்தால் இவன் இறப்பானா?" என்று என் நெஞ்சை, என் நட்பைச் சோதிக்கத்தான் இவ்வுலகை விட்டுப் போய்விட்டாயோ? நண்பா! நான் இன்னும் உயிர் வைத்திருக்கிறேன்; நட்புத் தன்மையிலிருந்தும் விலகிப் போய் விட்டேனே!' என்று புலம்பும் நட்புக் காதலைப் பாருங்கள்.

பளிங்கில் காணும் நெஞ்சம்

இந்த ஆருயிர் — நண்பனுடைய இதயத்தைப் பார்க்கிறோம் பளிங்கில் வைத்துப் பார்ப்பது போல, இப்பாட்டிலே:

அலங்காரம் எனஉலகுக்(கு) அமுதளிக்கும்
தனிக்குடையாய்! ஆழி சூழ்ந்த
நிலங்காவல் அதுகிடக்க, நிலையாத
நிலையுடையேன் நேய நெஞ்சின்
நலங்காண ஏகினையோ? நாயகனே!
தீவினையேன் நண்பி னின்றும்,
விலங்கானேன் ஆதலினால். விலங்கினேன்;
இன்னும்உயிர் விட்டி லேனால்!

[அலங்காரம் — அணி செய்வது. தனிக்குடையாய் — ஒப்பற்ற கொற்ற வெண்குடையை உடைய சக்கிரவர்த்தியே. ஆழி — கடல். நிலையாத நிலையுடையேன் — நிலையில்லாத மனத்தை, அதாவது சஞ்சல உள்ளத்தை மனநிலையாக உடைய நான். ஏகினையோ—போய்விட்டாயோ. நண்பு — நட்பு. விலங்கு — மிருகம். விலங்கினேன் — விலகினேன்.]

தசரதரின் ஆட்சிக்கு அறிகுறியான அந்த முத்துக்குடைதான் எவ்வளவு அலங்காரமாக அமைந்திருக்கும் சக்கிரவர்த்தியின் மணி மகுடத்தின்மீது! ஆனால் அந்த அரசு ஆபரணந்தானா உலகத்திற்கு? அமுதமல்லவா? 'இந்த அரசே நமக்கு நல்லணி, மெய்யணி!' என்று மகிழ்ந்த சமுதாயத்திற்கு, அழியாத உயிர் அளிக்கும் அமுத சஞ்சீவியாகி விட்டதாம் தசரத ராஜாங்கம். மற்றவர்கள் அலங்காரம் என்று கருதியதைப் பெரும் பொறுப்பாக — பெரியதொரு காவற்பணியாகக் கருதி வந்தார் தசரதர். அவருக்கு அது அலங்காரமும் இல்லை! மற்றவர்களுக்கோ தோற்றத்தால் அலங்காரம்; தொழிலால், பயனால் அமுதம். 'அத்தகைய பொறுப்பையும் விட்டுப்போனது என்னைச் சோதிக்கத்தானோ?' என்று கதறுகிறது நேய நெஞ்சு.

பாட்டின் மகுடம்

'நான் விலங்கானதால் நட்புத் தன்மையினின்றும் விலகி விட்டேன்' என்ற கூற்றில் மறைந்து கிடக்கிறது, 'நட்புத்தன்மையே மனிதத் தன்மை' என்ற குறிப்பு.

'இன்னும்உயிர் விட்டிலேனல்!'

என்ற கடைசி அடியின் பகுதி இப் பாட்டுக்கே மணிமகுடம். 'இன்னும்' என்ற சிறுசொல் எவ்வளவு பெரும் பொருள் தந்து, இம் மணி மகுடத்தில் 'கோஹினூர்' மணிபோல் அமைந்திருக்கிறது!

பழைய இனிய நினைவு!

இனி இவர்களுடைய நட்பு - வரலாற்றில் ஒரு பழைய நிகழ்ச்சி நினைவிற்கு வருகிறது. சம்பராசுரன் என்ற பரம துஷ்டன் மண்ணோடு விண்ணையும் வென்று உலகத்தை யெல்லாம் தயிரை உடைக்கும் மத்தைப்போல் மொத்தி ஹிம்ஸித்து வந்த காலம். அப்போது தசரதர் இந்திரனது வேண்டுகோளுக்கு இணங்கிச் சம்பரனுடன் சண்டைக்குப் புறப்பட்டார். அந்தச் சண்டை அந்த வீர மன்னருடைய நீண்ட வாழ்க்கையிலேயே ஒரு விசேஷ நிகழ்ச்சிதான். இப்போது ராமனைக் காட்டுக்குத் துரத்திய கைகேயி அம்மாளும் தசரதருடன் போர்க்களம் சென்று சாரத்தியம் செய்த அதே நிகழ்ச்சி. அதற்காகத் தானே தசரதர் அந்த வீர பத்தினிக்கு வரம் கொடுக்க நேர்ந்தது? அதனால் ராமன் காட்டுக்கும், தசரதர் சுடுகாட்டுக்கும் செல்ல, ஜடாயுவும் இப்படி யெல்லாம் புலம்ப நேர்ந்தது.

அதே சண்டையில் ஜடாயு படைத் துணையாக இருந்தான் தசரதருக்கு. வீர பத்தினி சாரத்தியம் செய்ய, நண்பன் வீர கவசமாய் உதவத் தசரதர் அன்று அடைந்த வெற்றியைப்போல் அவர் பிறகு என்றுமே அடைந்ததில்லை.

சம்பரன் மாண்டு கிடக்கிறான். அஞ்சிச் சுரம் பிடித்திருந்த இந்திரனர் மறுபடியும் தம் பொன்னுலகத்தில் தைரியமாகப் பிரவேசிக்கிறார், வெள்ளை யானைமீது. மண்ணிலும் விண்ணிலும் உள்ள எத்தனையோ பிரமுகர்கள் வியந்து பாராட்டுகிறார்கள், 'என்ன வெற்றி, என்ன உலகப் பெரும்பணி!' என்று. அப்போது தசரதர், தம் வீரபத்தினியின் சாரத்தியப் பணியைப் பாராட்டி வரம் கொடுப்பதற்கும் முன்பே, அப்போரில் அரும் பெருந் துணையாக நின்ற நண்பனுக்கு நன்றி பாராட்டித் தம் நட்புக் காதலையும் வெளியிட்டாராம். மண்ணும் விண்ணும் அறியப் பகிரங்கமாகச் சொன்னாராம் அந்த வார்த்தையை. 'அந்த வார்த்தையும் இப்போது தவறிப்போயிற்றே!' என்று பிரமிக்கிறான் ஜடாயு. அது என்ன வார்த்தை?

வாக்குத் தவறாத மன்னர்பிரானல்லவா? என்றும் தவறாத அவருடைய வார்த்தைகளும் இப்படித் தவறிப் போகலாமா? தசரத ராஜாவும் வார்த்தை தவற, யமதர்மராஜாவும் கடமை தவறிப் போகலாமா? இப்படி யெல்லாம் ஜடாயு புலம்புகிறான்.

'யமன் கடமை தவறினனா? யமன் தான் எவ்வளவு கண்டிப்பாக — எவ்வளவு கொடுமையாகத் தசரதருயிரைக் கொண்டுபோய் விட்டான்!' என்று நினைக்கிறீர்களல்லவா? அப்படி உயிரைக் கொண்டு போகவில்லையே! — என்கிறான் ஜடாயு.

உடலைப் பூமியில் போட்டு விட்டு உயிரைத்தானே கொண்டு போவது வழக்கம்: இதற்கு மாறாக இந்தத் தசரத மரணத்திலே யமதர்மராஜா, உயிர் கிடக்க உடலை வானத்திற்குக் கொண்டுபோய் விட்டாராம். 'யமனுக்கு என்ன மூளைக் கோளாறு!' என்று கேட்கிறான் ஜடாயு.

இது என்ன புலம்பல்—என்ன பைத்தியம்? பொறுத்துப் பார்க்கலாம் அடுத்த வாரம் வரை.